# புதிய தரிசனம்



5

முதலாம் ஆண்டு மலர்

மே - ஜூன்
2005



கலை இலக்கிய, சமூக சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளகங்கவர் ஆடைகளின் சாம்பிராஜ்யம்



யசோ ரெக்ஸ்

பிரதானவீதி நெல்லியடி

சகலவிதமான துவிச்சக்கரவண்டி வகைகளையும்
உதிரிப்பாகங்களையும் பாதணி வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள



கௌரி மிதிவண்டி வாணிபம்

பிரதானவீதி நெல்லியடி


புதிய தரிசனம்

# தரிசனங்களாய் .........


<u>நேர்காணல்</u>

கோ. கைலாசநாதன் 16

<u>சிறுகதைகள்</u>

சி.கதிர்காமநாதன் 04

தாட்சாயணி 12

ஞானரதன் 40

வனஜா நடராஜா 48

<u>கட்டுரைகள்</u>

கலாநிதி செ.யோகராசா 06

பேராசிரியர் செ.கிருஷ்ணராசா 25

கலாநிதி இ.முருகையன் 33

<u>கவிதைகள்</u>

துவாரகன் 03

குறிஞ்சி இளந்தென்றல் 11

கி.அ.தில்லைதாசன் 24

க.சாரங்கன் 32

ந.வினோதரன் 39

த.ஜெயசீலன் 47

சண்முகன் 54

S.S.இளையநிலா 64

<u>அஞ்சலிக்குறிப்பு</u>

சி.திருச்செந்தூரன் 56

<u>நூலறிமுகக்குறிப்பு</u>

க.குணேஸ்வரன் 62

<u>எதிர்வினை</u>

இராகவன் 60






பாஸ்கரன்
கரணவாய்

<u>முன்னட்டை ஓவியம்</u>
கோ.கைலாசநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பேனா முனை வார்த்தை .........

ஆசிரியர்
சி.த. கவிநேசன்

ஆசிரியர் குழு
சி.சிவகுமார்
பா.செந்தூரன்
சி.திருச்செந்தூரன்
ஜெ.ஜங்கரதாசன்

கௌரவ ஆசிரியர்
இரா. அகிலன்

விளம்பரத்தொடர்பு
மா.சத்தியேந்திரா

விற்பனைதொடர்பு
இ.அரவிந்தன்
ம.பிரசாத்

சகல தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
புதியதரிசனம்,
வதிரி,
கரவெட்டி
தொ.பே.இல
0776626132

இலக்கிய வீதியின் வழி பயணிக்கும் ஆரம்பப் பயணிகளாகிய நாம் உங்கள் கரங்களில் ஐந்தாவது இதழை ஆண்டுமலராய் சேர்ப்பிக்கிறோம்.

இந்த இலக்கியப் பயணம் முடிவிலி. இதில் ஒருவித நம்பிக்கையின் வீறாப்போடு இதழ் வெளிப்பாட்டினூடு இணைப் பயணிகளாய் "நடக்கத்" தொடங்கியிருக்கிறோம். இவ்வீதி வழி "சொகுசு" வாகனங்களில் பயணம் செய்வோர் எம்மைப் புறக்கணிப்பினும் அவர்களை புறக்கணிக்க ஒரு போதும் நாம் நினையோம்.

"தோற்பன தொடரேல்" என்று ஔவையார் கூறியிருப்பினும், எமது இப்பயணத்தில் சில தோல்விகளும், இடையூறுகளும் நழுவினாலும் அவற்றை விலக்கி வீறுகொள்கிறது எம்பயணம். இடைவெளிகள் இருப்பினும் எமது இதழின் இருப்பை தக்கவைத்தே தீருவோம்.

உன்னதங்களின் பிரசவங்களுக்கான, புதியவர்களின் களத்திற்குமான எங்கள் பயணத்தில் சுதந்திரமாய் கை வீசியபடியே பயணிக்க எத்தனிக்கிறோம்.

ஒவ்வொரு இதழிலும் புதியவர்கள் நுழைவது எமது வெற்றிக்கான அறிகுறி. இதழில் இளம் படைப்பாளிகளின் சில ஆரம்ப படைப்புக்களை வைத்து எம்மைக் குறை கூறி குப்பையிலெறிவது ஒன்றுக்குமாகாது என்பதை மனதிலிருத்துதல் நல்லது.

-ஆசிரியர்-





## தூக்கணாங்குருவிக் கூடு



அந்தப் பெருமரத்தில்
மிக இலாவகமாகத் தூங்கும்
தூக்கணாங் குருவிக் கூடுகள்

காற்றையே எதிர் கொண்டு
வாழச் சபிக்கப்பட்டவை போல்
தூங்கும் கூடுகள் அவை.

கை தேர்ந்த கலைஞனின் சித்திரத் தேர் போல்
ஒவ்வொரு தும்புகளாகத் தேடியெடுத்து.....
மரக் கொப்பின் நுனியில்
கட்டிய கூடுகள் அவை.

சாரைப் பாம்பின் முட்டை குடித்தலுக்கும்
குரங்கின் குலைத்துப் போடலுக்கும்
எட்டாமற் போனதும்
குருவிகளின் வாழ்வுப் போராட்டமே.

அந்த விருதுகள் விட்ட
பெருமரத்தில்.
தூங்கும் கூடுகளைச் சிதைத்து விட
காற்றுடன் சல்லாபிக்கிறது சாரைப்பாம்பு

கூடுகளைத் தாங்கும் வலிய கிளைகளும்.....
ஆழ ஊன்றிய வேர்களும் உள்ளவரை
முடியுமா என்ன?
மரம் வலியன்
அதன் வாழ்வோடு வாழும்
கூடுகளும் வலியன்
ஊழிக்காலம் முடியும் வரை!

-நிலாரசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல்



" கெதியாய் அம்மா அவர் சாப்பிடவாற நேரமாகுது.

" அம்மா அந்தரப்படாதை சமைச்சுப் போடலாம்.

" சரி அடுப்பில 'சருவத்தை வை'

" வைச்சிட்டனம்மா"

" வைச்சிட்டியே.. இரண்டு செம்பு தண்ணி யெடுத்து சருவத்துக்குள்ள ஊத்து

" ஆ...... ஊத்திப்போட்டனம்மா

" ஊத்திப் போட்டியே......... தண்ணி நல்லா கொதிக்க வேணும், சூடு வரவேணும்.

" சரியம்மா நல்லாக் கொதிக்க வைக்கிறன்.

" நல்லாய் கொதிச்ச பிறகு ஒரு பேணி அரிசியை போடு

" பிறகு

" என்ன, அரிசி அவிஞ்சு அவிஞ்சு மேல வரும்

" மேல வர





" சருவத்தில இருக்கிற ' கஞ்சியை வடிக்க வேணும்.

" எப்படியம்மா " அரிசி அவிஞ்சு போட்டு தெண்டு பாக்கிறது

" கஞ்சி பொங்கி மேல வர அரிசியும் வரும் அகப்பையிலே எடுத்து , கையில அரிசியை நசித்துப் பார்த்தால் அவிஞ்சது தெரியும்

" என்ன விளங்கிட்டுதோ?

...... கொஞ்சம் விளங்கிட்டுது

" சரி அரிசி நல்லா அவிஞ்ச பிறகு, கஞ்சியை வடிச்சுப் போட்டு... சருவத்தை அடுப்பிலே வைச்சு அகப்பை காம்பால நல்லா அடியில கிளறி விட வேணும். பிறகென்ன கொஞ்ச நேரத்தில சருவத்தை இறக்கி வைச்சியெண்டால் சோறு பூ மாதிரி இருக்கும்.

" என்ன பிள்ளை சரியே, விளங்கிட்டுதே?

" ஐயோ ........... கொப்பர் வாற நேரமாச்சு அந்தாளுக்கு 'சுடச்சுட' சமைச்சுப் போட வேணும்... சந்தையில கறி புளியும் பாக்க வேணும். சரி வைக்கிறன்

" தம்பி போனுக்கு எவ்வளவு காசு ஓ எல் (O/L) படிச்சுக் கொண்டிருந்த பெட்டையை வெளியில கட்டிக் கொடுத்துப் போட்டு நான் படுகிற பாடு........ அந்தாள் வாற நேரமாகுது. நான் சமைக்கவேணும்.

(சிந்தனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் இலக்கியத்தின் இயல்புகள் : மறுமதிப்பீடு

[illegible]

நாட்டார் இலக்கியத்தின் இயல்புகளாக வழமையாக கூறப்பட்டு வருவனவற்றுள் சில நுணுகி நோக்கும் போது மாற்றத்திற்குரியனவாயுள்ளன. சில மேலதிக விளக்கத்தை நாடி நிற்கின்றன. புதிதாகச் சேர்க்கப்படவேண்டியனவுமுள்ளன. எனவே நாட்டார் இலக்கியத் தேடல்கள் ஓரளவு அதிகரித்து வரும் இன்றைய சூழலில் அவை குறித்த மறுமதிப்பீடு அவசியமாகின்றது. அதற்கானதொரு இன்றியமையாத தேவையுமுள்ளது.

முதலில் நாட்டார் இலக்கியத்தின் இயல்புகளாக ஆய்வாளரால் கூறப்பட்டு வருபவை எவை என்பது பற்றிக் கவனிப்போம். இவ்விதத்தில் நாட்டாரியல் ஆய்வாளருள் முக்கியம் பெற்றுள்ளவரான பேராசிரியர் லூர்து கூறுவன பின்வருமாறு:

1. வாய்மொழியாக பரப்பப்படுவது.
2. மரபு வழிப்பட்டது.
3. ஆசிரியரற்றது.
4. ஒருவித வாய்ப்பாடுகளுக்குள்ளடங்குவது.
5. ஒரு குழுவினரால் (நாட்டாரால்) பகிர்ந்து கொள்ளப்படுவது
6. பல்வேறு வடிவங்களால் திரிபடைவது.

மேற்கூறியவற்றுள் முதல் மூன்று இயல்புகளுமே இவ் வேளை, எமது கவனத்திற்குள்ளாகி ....... நெகிழ்ச்சியை அல்லது மேலதிக விளக்கத்தினை அவாவி நிற்கின்றன.

### வாய்மொழியாக பரப்பப்படுவது:

நாட்டார் இலக்கிய கூறுகள் (நாட்டார் பாடல், கதைப் பாடல், கதை, பழமொழி, விடுகதை) வாய் மொழியாக பரப்பப்படுகினறன என்பது முழுமையும் ஏற்புடையதன்று. குறிப்பாக, நாட்டார் பாடல்கள், கதைப் பாடல்கள் ஆகியவற்றுள் ஒருவகையானவை ஏடுகளில்





எழுதப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது. இவ்விடத்தில், வன்னி நாட்டார் பாடல்களின் தொகுப்பாசிரியர் கூறுவது கவனத்திற்குரியது.

"வன்னி வள நாட்டில் சிதறி, ஆங்காங்கே பல முதியவர்கள் மனதில் இருந்த பாடல்களையும், கறையானால் அரிக்கப்பட்ட கையெழுத்து, ஏட்டுப்பிரதிகளில் இருந்த பாடல்களையும் தொகுத்து நூலாக வெளியிட முயன்றேன்..........."

(கீழ்க்கோடு ஆய்வாளரினால் இடப்பட்டுள்ளது.)

இவற்றை நோக்கின் ஏடுகளில் மட்டுமன்றி கையெழுத்து பிரதிகளிலும் நாட்டுப் பாடல்கள் எழுதப்பட்டிருந்தமை தெளிவாகின்றது. இஃது பிற்கால வழக்காகலாம். மட்டக்களப்பில் வெளிவந்த "மகா மாரித்திவ்ய கரணி" யை கவனிப்பின், இதிலுள்ளவற்றுள் கணிசமானவை நெடுங்காலமாக கோயில்களில் பாடப்பட்டு வருபவை. அதே வேளையில் ஏடுகளிலும் எழுதப்படுபவை.

ஆக நாட்டார் பாடல்களில் சில, ஏடுகளிலும் (பின்னர்) கையெழுத்துப் பிரதிகளிலும் எழுதப்பட்டு வந்துள்ளன என்பது தெளிவாகப் புலப்படுகின்றது அல்லவா?

### மரபு வழிப்பட்டது:

மரபு வழிப்பட்டது என்கின்ற போது நெடுங்காலமாக வழக்கிலிருந்து வருவதென்பதே பொருளாகின்றது. எனவே, நாட்டார் பாடல்கள் முதலியன புதிதாக உருவாக முடியாதன என்பது இதன் உட்கிடையாகிறது. ஆயினும் சமகால விடயங்கள் கிராமத்து மக்களால் உடனுக்குடன் பாடல்களாக மாறிவிடுவது கண்கூடு. இதற்குச் சான்றாக தமிழ் நாட்டின் சென்னை இடுகட்டு மக்களிடம் வழங்கிவரும் "கானாப்பாடல்" ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

" அண்ணா வழிவந்த அண்ணன் தம்பி தங்க
இரண்டு தெய்வமே
ஒண்ணு கோபாலபுரத்திலே
ஒண்ணு இராமவரத்திலே
அண்ணா சொன்னார் நீங்க பிரிக்காதீங்க
அண்ணா இறந்தார் - கட்சி
ஒடஞ்சி போனதே - கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிஞ்சு போனதே
ஏழை சனமும் தனியாகப் பிரிந்தார்
சத்துணவு தந்தார் இந்தப் புரட்சித் தலைவர்-இந்த
ஏழைக்காகப் பாடுபட்டார்
கண்ணொளி தந்த எங்க டாக்டர் கலைஞரே
குடியை ஒழித்தார் - நல்ல
மாடி கொடுத்தார்..............."

மட்டக்களப்பு பிரதேசத்தில், உதாரணமாக மண்டூர் பிரதேசத்தில் உள்ள கிராமப் புறங்களிலும் சமகால விடுதலை இயக்கங்கள் பற்றிய நாட்டார் பாடல்கள் பல உருவாகி இருப்பதாக அறியமுடிகின்றது.

ஆசிரியரற்றது

நாட்டார் இலக்கியங்களுள் நெடுங்காலமாக இருந்து வருவன ஆசிரியரற்றன என்பது உண்மை. ஆயின், மேற்குறித்த சமகால நாட்டார் பாடல்கள் முதலியவற்றுள் சிலவற்றின் ஆசிரியர்கள் அறியப்படகூடியவராகவுள்ளனர். அது மட்டுமன்றி, ஒரு குழுவினரால் பாடப்படுவதன்றி தனியொருவரால் பாடப்படுவனவாகவும் அத்தகையன அமைவது உண்டு. இன்றைய தொழில் நுட்பச் சூழல் காரணமாக அச்சில் நூலுருப்பெறுவதுண்டு.

தவிர, நாட்டார் இலக்கிய இயல்புகள் தொடர்பாக எமது ஆழ்ந்த சிந்தனைக்கு, தேடலுக்கு, உரிய புதிய விடயங்கள் சில உள்ளன. அவை பின்வருவன

ஏடுகளில் எழுதப்பட்டுள்ளமை;

முற்கூறியவாறு நாட்டார் பாடல், கதைப் பாடல் சில ஏடுகளில் எழுதப்பட்டு வந்துள்ளன. என்கின்ற போது பின்வரும் வினாக்கள் எழுகின்றன.

*அவை ஏன் எழுதப்பட்டன?*
*யாரால் எழுதப்பட்டன?*
*யாருக்காக எழுதப்பட்டன?*
*எப்போது எழுதப்பட்டன?*
*படிப்பறிவு அற்ற மக்களுக்காக, படிப்பறிவுடையோர் எழுதினார்களா?*





*படித்தோர் எழுதியவற்றைத் தேவைகருதி பாமரமக்கள் பேணிவந்தனரா?*
*தாம் பேணி வந்தவற்றை படித்துவந்தார்களா?*
*அன்றேல், மக்கள் வழக்கில் இருந்தவை ஒரு காலகட்டத்தில் ஏடுகளில் எழுதப்பட்டனவா?*

இவை பற்றிய தேடல் இலக்கிய உருவாக்கம் பற்றிய புதிய சிந்தனைகளை முகிழ்க்க வழிவகுக்கும் என்றே கருதுகின்றேன்.

<u>பாவனை பாடல்களுள்ளமை</u>

நாட்டார் பாடல்கள் யாவும் நேரடியான நடைமுறை வாழ்வுடன் தொடர்புபட்டவை என்பதற்கில்லை. உதாரணமாக, தமிழ் நாட்டில் கத்திரி மலைச்சாரலில் வழங்கி வரும் திருமணப் பாடல்கள் ஒருவகையானவை பாவனைப் பாடல்களாகின்றன.

ஈழத்திலும், கிழக்கிலங்கையில் வழங்கி வரும் கவிகளுள் காதல் பற்றி கணிசமான "கவிகள்" பாவனைப் பாடல்களாகவே உள்ளதாக கருதப்படுகின்றது; முஸ்லிம் மக்கள் மத்தியில் வழங்கும் கவிகள் அத்தகையன என்று கலாநிதி நு.்.மான் நிறுவியுள்ளார்.

<u>புலவர்களால் இயற்றப்பட்டுள்ளமை</u>

நாட்டார் பாடல்கள் என்று கருதப்படுவனவற்றுள் சில, நன்கு கல்விகற்ற புலவர்களால் பாடப்பட்டுள்ளனவோ என்ற ஐயத்தை ஏற்படுத்துவனவாகவுள்ளன.

எ.டு: "பிள்ளையார் சிந்து" ( வன்னிப் பிரதேசத்தில் வழங்குவது) முதல் பாடலின் ஆரம்பப் பகுதி

" வீசுகர மேகநிற வேதநுத லாள் கருணை
மேவுமத வரண வினாயக வினோத
சூசுதமிழ் சேர்முதல் கோமண வள்ளிக் கிளைய
குஞ்சுமத ழைக்கிளைய குஞ்சரமு கத்தோன்
பேசுதிக ளுன்கதைக ளிசைபாடு தற்குமொரு
பிழைகள் வராமலே................"

முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள வழிநடைச் சிந்துகளுள் சிலவும் இவ்வாறமைந்துள்ளமை இங்கு நினைவுக்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தொடர்பில் அம்மானை வடிவில் (நாட்டார்) கதைப் பாடல்களாக வழங்கிவரும் சில நூல்கள் பற்றி பேராசிரியர் சிவத்தம்பி மேற்குறித்தவாறான கேள்வியை எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுருங்கக் கூறின், நாட்டார் பாடல் இயல்புகள் குறித்த மேற்கூறியவாறான பிரச்சனைகள் எழுவதற்கான காரணம் மேலைத்தேய ஆய்வினது கருத்துக்களை எமது ஆய்வாளர் அவ்வாறே தரமுற்படுவதனாலேயாகும். பதிலாக, அவ்வேளைகளில், தமிழ் பாரம் பரியத்தையும், நடைமுறை வாழ்வியலையும் கவனத்தில் எடுப்பின் இத்தகைய மறுபரிசீலனைக்கான தேவை ஏற்படாதென்றே கருதுகின்றேன்.

## படக்கவிதைகள்-4



பாலகனே
தாய்மடியில்
உறங்கும் வரை உறங்கு
பின்பு தாய்மடிக்காக
ஏங்க வேண்டிவரும்

இ.கோபனா
2005 கலைப்பிரிவு
யா/சாவகச்சேரி இ.கல்லூரி

அன்னையே
காணமற்போன உன் கணவனை
தேடித்தரவா உன்சேலை ஊஞ்சலுடன்
பாலூட்டி அணைக்கின்றாய்.

கு.டயானா

குழந்தாய்....!
அன்று வீரப்பால் குடித்து
பகைவருக்கு வாள் காட்டினாய்
இன்றோ என்னபால் குடித்து
கன்னியருக்கு வாள் காட்டுகின்றாய்

அ.சுகன்யா

### இன்னும் கவிதை தந்தோர்

ச. சுகுணா
யோக. டயானதியா
க. ஜனனி
வி. கார்த்திகா
ந. தீபா
க.நித்தியா
ப.கோபிகா


வெளிவந்து விட்டது

பொலிகையூர் சு.க. சிந்துதாசனின்

ஓவிடம்

(கவிதைத்தொகுப்பு)

இது ஓர் இளம் கவிஞனின் புதிய குரல்கள் அடங்கிய தொகுதி



தொடர்புக்கு
சு.க. சிந்துதாசன்,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

தொடர்புக்கு
புதியதரிசனம்,
வதிரி,
கரவெட்டி.






# ஆணிகள்

இரண்டு ஆண்டுக்கொரு முறை
இடம் மாறிக் கொண்டிருக்கும்
வாடகை வீட்டில் உள்ளவன்
வாழ்வு பற்றி சொல்ல வேண்டியதில்லை

அடுக்குமாடி கட்டடத்தில்
வாழ்பவன் வாழ்வும்
வாடகைக்கு வாழ்பவன்
வாழ்வும்
இயந்திர உலகில்
விசித்திரமாகிவிட்டன.

அறைகள் எங்கும்
அலங்கரித்திருந்த ஓவியங்களை
அப்புறப்படுத்தும்
அவசரத்தில்
நானும் நண்பர்களும்.

பார்த்து எடுங்கள்
படத்தில் கீறல் விழுந்திற போவுது
நண்பர்களின் குரல்கள்
ஓவியங்களை கவனமாக
எடுத்து வைக்க செய்தன.

அறைக்கு அறை
வெளிவரும் போதே
கீறல் விழுந்த உள்ளத்தை
யார் பத்திரப்படுத்துவார்கள்.

எல்லாப் பொருள்களையும்
எடுத்து வைத்து விட்டு
வாகனத்தில் ஏறினோம்

இவ்வளவு காலம்
வாழ்ந்த வீட்டைவிட்டு
நீண்ட தூரம் வந்த பின்
நினைவுக்கு வந்தது

சுவரெங்கும் ஓவியங்களை
சுமந்திருந்த ஆணிகள்
இனி எதை சுமந்து நிற்கும்

என் ஓவியங்களை
எல்லோரும்
பார்ப்பதற்கு
பணிபுரிந்த ஆணிகளை
அனாதையாக விட்டுவந்த
இந்த பாவத்தை
எங்கு தொலைப்பது?

இத்தனைக் காலம்
சுமந்திருந்த ஆணிகளில்
ஞாபகத்திற்கு ஏனும்
ஒரு ஆணிகூட
எடுத்துவரவில்லையே.....


ஆணிகளின் பணியையும்
ஆணிகளின் அடக்கத்தையும்
நினைக்க நினைக்க
ஆணிகள் அறைந்த சிலுவையாக
அதிர்கிறது நெஞ்சம்.

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிக்காலடி



ஒவ்வொரு தடத்தையும் அவள் மிக எச்சரிக்கையோடே பதித்திருந்தாள். அந்தத் தடங்கள் யாருடையது போலவும் இல்லை. அவை அவளுக்கே அவளுக்கானவை. அந்தத் தடங்களில் அவள் பாதங்களிலிருந்த மிக மெல்லிய ரேகைகள் கூடப் பதிவாகியிருந்தன. ஆனால் அவ்வளவு ஆழமாக யாரும் தடங்களைக் கவனிப்பதில்லையே. அந்தக் கடற்கரையோரம் இப்படி எத்தனை சுவடுகள் ஒன்றோடொன்று கரைந்து அமிழ்ந்து நீரடித்து அழிந்து போயின.

அலை எட்டாத் தொலைவிலேயே அவள் நடந்திருக்க வேண்டும். அவை ஒரே சீராய் அந்த ஈரமணலில் படிந்திருந்தன. இடையிட்ட எந்த ஒரு சுவடுமே குறுக்கிடாதபடி, மிக நேர்த்தியாய் அந்த சுவடுகள் ஓவியம் வரைந்திருந்தன. மிக மென்மையான பதிவுகள் அவள் உள்ளத்திலிருந்ததை எழுதிச் சென்றனவோ......? அவளது சுவடுகளுக்குச் சற்றுத் தள்ளி முன்னே நடந்து சென்றது போலான இன்னொரு வகைத் தடங்கள். அவை சற்று





...து சன நூலகம்
...ழ்ப்பாணம்

ஆழமாய் விழுந்திருந்தன. அந்தச் சுவடுகள் மணலுள் சற்றே பள்ளத்தை ஏற்படுத்தியிருந்தன. ஒரு ஆணினது சுவடுகளாய் இருக்கலாம். உணர்ச்சி வேகத்தைப் பிரதிபலிப்பதாயிருந்த அந்தச் சுவடுகளும், உணர்ச்சிக் கொந்தளிப்பை உள்ளடக்கியிருந்த இந்தக் காலடிகளும் நெருங்கி நெருங்கி வந்தன. சில புள்ளிகளில் மிக அருகேயும், சில புள்ளிகளில், கொஞ்சம் எட்டவுமாய் அந்தத் தடங்களின் விளையாட்டுத் தொடர்ந்தது.

மென்மையான அவளது தடங்களும், ஆழமான அவனது தடங்களும் எச்சரிக்கையோடே, ஒன்றில் ஒன்று விழுந்து விடாதபடி ஜாக்கிரதையாய் இருந்தன. இருந்தும், ஒன்றை ஒன்று ஈர்க்கவாய் தாமதித்தும், விரைந்துமாய் தம் பயணம் தொடர்ந்தன. சுற்றியிருந்த நூற்றுக்கணக்கான காலடிகள் தம்பாட்டில் ஒன்றோடோன்று கலந்து கரைவுற்று மறைந்து கொண்டிருந்தன. இவர்களது சுவடுகள் தனித்து நின்றன. பயணத்தின் பாதி தூரம் கழியும் வரை சுயமிழக்க முடியாமல், தம் உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளாமல், ஒன்றையொன்று பிரியவும் மனமின்றி தொடர்ந்து கொண்டிருந்தன. இந்த விளையாட்டை யார் கவனித்திருக்கக் கூடும். மேலே பறக்கின்ற பறவைகளின் கானத்தில் இந்த சுவடுகளின் கதை வழிந்திருக்கக் கூடுமோ.........? அல்லது எட்டி எட்டி வருகின்ற அலை இந்தத் தடங்களை எட்டி அவற்றின் போக்கு பிடிபடாமல் வெறுப்போடே திரும்பியிருக்குமோ.......? இந்தச் சுவடுகளின் வேகமும் விரைவும் அப்படியே இருந்தன. எந்த சுவடுகளும் குறுக்கிடாமல் அப்படியே போய்க்கொண்டிருந்தன. அவனது சுவடுகளின் பின்னரான அவளது சுவடுகள் இப்போது அவனுடையதை நெருங்கத் தொடங்கியிருந்தன எந்தச் சுவட்டினதும் குறுக்கீடுகளில்லாத ஒரு அமைதிப் பெருவெளியில் அவளது சுவடுகள் அவனுடையதை அண்மித்தன. இப்போது அவளது தடத்தின் ரேகைகள் அப்பட்டமாக தெரிந்தன. ஆனால் ஆழமான அவனது தடங்களின் ரேகைகள் மங்கியிருந்தன. அவனது சுவடுகளின் வேகம் அதிகரித்தது. இவளது சுவடுகள் பின்தங்க ஆரம்பித்தன. பொங்கிப் பிரகாசித்த அவளது ரேகைகள் மீண்டும் மங்கத் தொடங்கின. என்றாலும் பின் தங்கி விடக் கூடாதெனவும் வேகத்தில் அந்தச் சுவடுகள் நடப்பது தெரிந்தது. மிக, மிக, அண்மித்திருந்த அந்தச் சுவடுகளின் ரேகைகள் கொஞ்சம், கொஞ்சமாய் அழிந்து கொண்டு வந்தன. அவனது ரேகைகள் மணலுள் வெளிக்கொள்ள மறுத்தன.

எவ்வளவு ஆர்வமாய் ஆரம்பித்த பயணம். அவளது சுவடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பரித்து அழும் நிலை வருமோ.......யாரறிவார்? எந்தச் சுவடும் அறியாதபடிக்கு அல்லவா எச்சரிக்கையோடு அவள் தன் சுவடுகளைப் பதித்திருந்தாள். அவனது அந்த ஆழ்ந்த சுவடுகள் பற்றிக் கதைக்கின்றவர்களுக்கு அவனுடனே சிறிதளவு தூரத்துக்கேனும் இணையாய் நடந்த அவளது சுவடுகள் பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மேலே பறக்கும் பறவைகள் கூடவா இவள் சுவடுகளை அப்படிப் புறக்கணித்து விட்டன. எட்டி வரும் அலைகள் கூடவா அவள் சுவடுகளை ஏனென்று கேட்காமல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன.

எத்தனை அழகான அவளது சுவடுகள். அதைக் கொண்டே அவள் அந்தக் கடற்கரை முழுவதுமாய் கோலம் போட்டிருக்கலாம். இடையில் குறுக்கிட்ட அவனது பாதங்களின் ஈர்ப்பில் அவளது சுவடுகள் அவன் பின்னேயே அலைந்தனவோ.........? அந்த ஆழ்ந்த சுவடுகளோடும் சேர்ந்து கரைமுழுவதும் கோலமிடலாம் எனும் எண்ணமோ....? இப்போது அந்த ஆழ்ந்த சுவடுகள் கோலமிட்டுக் கொண்டிருக்கின்றன. இவளது மெல்லிய சுவடுகள் சோர்ந்து வெறும் கிறுக்கல்களாய்க் கிடக்கின்றன. எந்தக் குழந்தை அவளது தடத்தை ஒரு விளையாட்டுப் பொருளென எடுத்து விளையாடப் போகிறதோ.......?

ஒன்றோடொன்று குழம்பிக் கலைந்திருந்த தடங்களிடையே அந்தப் பெருமணல் வெளியில், இந்த இரட்டைத் தடங்கள் மட்டும் நெடுந்தூரத்துக்குத் தனித்துத் தொடர்ந்தபடியிருந்தன. இடையிடையே மங்கியிருந்த தடங்கள், இடையிடையே ஆழமாகியிருந்தன. இடையிடையே நெருங்கியிருந்த தடங்கள் இடையிடையே தூரமாகிப்போயின. அவளுடையது மெதுவாய் நகர்ந்தது. அவனுடையது விரைந்தது. அவனது தடங்களின் ஆழம் அதிகரித்துக் கொண்டு வந்தது. அவளது தடங்கள் வலுவற்று மெல்லிய படலமாகிக் கொண்டிருந்தன. அதன் தனிப்பட்ட ரேகைகளை இனிக்காணமுடியாது போறுபட்டது. சற்றே போக போக அந்தக் காலடிகள் மங்கியிருந்தன. ஓரிடத்தில் அந்தக் காலடி காணாமல் போயிற்று. அதை அலை அடித்துக்கொண்டு போனதா? அப்படியெனில் அவனது சுவடுகள் எப்படி மறையாமலிருக்கின்றன. அவனது ஆழ்ந்த சுவடுகள் இன்னும் துல்லியமாயே இருக்கின்றன. அவளது கடைசிக் காலடியின் மெல்லிய படலம் அந்த மணலில் என்ன தான் எழுதிப் போயிற்று.........? அவளது காலடிகள் ஏன் காணாமல் போயின. அவளது சுவடுகள் ஏன் இப்படி அந்தரத்தில் நிற்கின்றன....?





யாருக்கேனும் தெரியுமா..........? சுற்றிக் கலைந்து குலைந்திருக்கின்ற ஓராயிரம் சுவடுகளுக்கு இவளது சுவடுகள் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. எனினும் தூர நுரையெறிந்து பொங்கிப் பிரவகிக்கின்ற அலைக்காவது இவள் சுவடுகளைப் பற்றி ஏதேனும் தெரிந்திருக்கக் கூடுமா......? மேலே, இசையைக் கவ்விக் கொண்டு பறக்கின்ற அந்தப் பறவைகளேனும், அவளது சுவடுகளுக்கு என்ன நேர்ந்தது என்று சொல்லமாட்டாவா? எந்தக் சாட்சிகளுமற்றுக் கரைந்து போன அவளது சுவடுகளுக்கு, அந்தப் பறவைகளும், அலைகளுமேனும் சாட்சியாகக் கூடாதா.......?

அவள் தனது சுவடுகளை வானத்திலேயே பதித்திருக்கலாம். எந்த சுவடுகளுமற்றுப் பறக்கின்றனவே பறவைகள்.......அவை போலவே தனது சுவட்டை இசையாய்க் கீறி வானத்தில் உலவவிட்டிருக்கலாம். அல்லது அவளது சுவடுகள் அவனுடையதோடு கலந்து மறைந்திருக்கலாம். அவனுடைய சுவடுகளுள் கலப்பதே இலட்சியமாய், அவள் தன் ரேகைகள் மறைவது பற்றிக் கூட கவலைப்படாதிருக்கலாம். இல்லையேல் அவள் தன்னை வெளிக்கொள்ள ஆசைப்பட்டிருப்பினும் கூட, அவனது சுவடு, அவனை தன் மேல் ஆழமாய் படிந்து, அவளுடையதை மறைத்திருக்கலாம்.

எப்படியிருப்பினும், மங்கலாய்த் தெரிகின்ற அவளது கடைசிக் காலடி, சோர்ந்து உலைவுற்றுக் கிடப்பது மட்டும் உண்மை. எதையோ எதையோ எதிர்பார்த்து தொடங்கிய பயணத்தின் முடிவில், இனி எந்த எதிர்பார்ப்பும் இல்லை என உணர்ந்ததாய், உலகின் எல்லா நம்பிக்கைகளும் , வசீகரங்களும் பொய் எனத் தோன்றிய உணர்ச்சியாய், இந்தக் காலப் பெருவெளியின் மிகப் பெரும் நம்பிக்கை வறட்சியாய் அந்தக் கடைசிக் காலடி துவண்டு போய்க் கிடக்கின்றது. அந்தக் காலடியின் மங்கிப்போன ரேகைகளை இனி யாரால் தான் மொழி பெயர்க்க முடியும்........? கேள்விக்குறியற்ற கேள்வியாய் ......... சாட்சிகளற்ற மௌனமாய், அந்தக் கடைசிக் காலடி மணல் வெளியில் அலையெழுப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



ஈழத்தின் அகவெளிப்பாட்டாளர்களில் கோ. கைலாசநாதன் முக்கியமானவர். ஒரு தனித்துவமான அகவெளிப்பாட்டு வெளியில் இவர் தொடர்ந்தியங்கி வருவது கவனத்துக்குரியது. நீர்வர்ணத்தை நேர்த்தியாகவும் நுணுக்கமாகவும், இரசனையாளனின் மனத்தில் அதிர்வினை ஏற்படுத்த தகுந்த விதத்தில் கையாளும் ஈழத்தின் அகவெளிப்பாட்டாளர்கள் சிலரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அலை,சமர்,திசை போன்ற சிறுசஞ்சிகைகளுக்கும், குறிப்பிடத்தக்க சில சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத்தொகுப்புகள் மற்றும் நாவல்களுக்கான முகப்புகளுக்கும் ஓவியங்களை வரைந்துள்ளார். தற்போது தென்மராட்சி கல்வி வலயத்தில் சித்திரக்கலை ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி வருகிறார்.

பிறந்த திகதி : 24.02.1956

பிறப்பிடம் : மட்டுவில் வடக்கு

வதிவிட முகவரி : சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

படைப்பாக்க காட்சிப் படுத்தல் : 12 வயதில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் தனி மனித ஓவியக்காட்சி .
16 வயதில் யாழ்இந்துக்கல்லூரியில் 100 ஓவியங்களை வைத்து தனிமனித ஓவியக்காட்சி.
உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய "கூட்டு" ஓவியக்காட்சி யாழ் பல்கலைக்கழகத்தில் குழு ஓவியக்காட்சி
1999ல் இந்தியகலாசார நிலையம் கொழும்பில் 4 ஓவியர்களுடன் வைத்த கூட்டுக் காட்சி
1999ல் பெண்கள் ஆய்வுமையம் நடத்திய ஓவியக் காட்சி.
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரான்ஸிய நட்புறவுக்கழகத்தில் 12 யாழ்ப்பாணத்து ஓவியர்களுடன் நடத்திய குழுக்காட்சி(2004)

சந்திப்பு:- ரோகவி





**01) உங்களுக்குள்ளிருந்த அகவெளிப்பாட்டாளனை உங்களால் எப்போது அடையாளம் காணக்கூடியதாக இருந்தது?**

தரம் 3 படிக்கும் போது களிமண்ணில் உருவங்கள் செய்வதில் மிகவும் நாட்டம் இருந்தது. பிரதானமாக பிள்ளையார், முருகன், கிருஷ்ணன் கடவுள் உருவங்களையே களியில் செய்வேன். இந்த உருவங்களுக்கு விரும்பியவாறு நீர்வர்ணம் (water color) தீட்டுவேன். எனக்குத் தேவையான வர்ணவகைகளை எனது தந்தையார் வாங்கித் தருவார். இந்த வேலைகள் யாவும் பிழைகளுடன் மரபுவழி ஆக்கங்களாகவே இருந்தன. இதனைவிட அம்புலிமாமா, ஆங்கிலப் புதினப் பத்திரிகைகள் இவற்றில் வெளியிடப்பட்டுள்ள, என்னை ஏதோ விதத்தில் கவர்ந்துள்ள சித்திரங்களைப் பார்த்தும்வரைவேன். இந்த விருப்பங்கள் என்னுள் எவரது வழிப்படுத்தல்களும் இல்லாமல் அந்த வயதில் இருந்தன. தரங்கள் 6,7 கற்கும் போது சித்திரத்தை ஒரு பாடமாக கற்றேன். வரைய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிய இந்தக் காலப்பகுதியில் என்னைச்சரியான வழியில் நெறிப்படுத்துவதற்கு 'ஆசான்' என்னும் பதத்திற்குச் சகலவழிகளிலும் பொருத்தமுள்ள ஓர் ஆசிரியர் எனக்குக்கிடைத்தார். நீர்வர்ணத்தில் எனக்கு நாட்டத்தை ஏற்படுத்தியவரும் அவரே. அவரின் பெயர் திரு.பொ.விசாகப்பெருமாள் என்பதாகும். இவர் 1964ஆம் ஆண்டு மட்டுவில் சந்திபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். தனது சித்திர கூடத்தில் பல வகை ஓவியங்களை அழகானமுறையில் ஒட்டியிருந்தார். இந்த ஓவியங்கள் யாவும்; சஞ்சிகைகள், சில நிறுவனங்களின் கலண்டர்கள் இவற்றிலிருந்து வெட்டிஎடுக்கப்பட்டவையாக இருந்தன. ஒட்டப்பட்ட ஓவியங்களில் ஒன்று என்னை மிகவும் கவர்ந்தது. அதனை அங்கு போகும் தடவைகளில் எல்லாம் பார்ப்பேன். அந்த ஓவியத்தின் தலைப்பு `Blue bird' என நினைக்கின்றேன். கறுப்பு,நீலம்,இருண்டபச்சை மென்மையான மஞ்சள், சாம்பல் நிறம் இவற்றினால் தீட்டப்பட்டதாக இருந்தது. அது ஒரு பெண்ணின் உருவம். நிறங்கள் யாவும் ஒழுங்கற்றுக் குழப்பமாகத் தெரிவது போல் அக்காட்சி அமைந்திருந்தது. இது எனது அகத்தில் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. அந்த வயதில் காரணம் என்ன வென்று அறியாமல் அந்த ஓவியத்தை விரும்பினேன். இந்த இடமே என்னுள் இருந்த அகவெளிப்பாட்டாளனை நான் அடையாளம் கண்ட இடமாகக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொள்ளமுடிகின்றது.பெரும்பாலும் நீலத்தாலும் கறுப்பாலும் ஆன இப்படைப்பு ஒழுங்கற்று இருந்தாலும் ஒழுங்காகவே இருந்தது. இப்போதும் அந்த நீலப்பறவை எனது அகக் கூட்டுக்குள்ளே விழித்தபடி இருக்கிறது.

**02] ஈழத்தின் முக்கியமான அகவெளிப்பாட்டாளன் என்ற அடிப்படையில் கேட்கின்றேன். அகவெளிப்பாட்டுக்கு முறையான பயிற்றுவித்தல் அவசியமானதா?**

பயிற்சிகாரணமாகத் 'திறன்' என்பது வருகின்றது. ஆனால் பயிற்சி காரணமாகக் 'கலை' என்பது வருமென்று கூறமுடியாது. வெறும் பயிற்சி மட்டும் இருந்து விட்டால் நல்ல படைப்புகளைப்படைக்கலாம் எனக் கூறமுடியாது. படைப்பாற்றலுக்கும் படைப்புகளைப் புரிந்து கொள்வதற்கும் மூன்றாவது கண் என்பது அவசியமாகின்றது. நாள் முழுவதும் தாமரைமலர் மேல் தவளை இருந்தாலும் அம்மலரின் அழகையும் அதில் இருக்கும் தேனையும் அதனால் நுகர்ந்து கொள்ளமுடியாது. ஆனால் எங்கிருந்தோ வரும் தேனீ இரண்டையும் நுகர்ந்து கொள்வதுடன் பறந்து விடுகின்றது. முறையான பயிற்சி அல்லது பயிற்றுவித்தல் என்பது ஓர் எல்லையுடன் நின்று விடக்கூடியது. தரிசனப் புலத்துக்குள் இவை பெருஞ்செல்வாக்குச் செலுத்தா.

**03] ஒரு சுயாதீன அகவெளிப்பாட்டு வெளியில் சஞ்சரிக்க தேவையான நிபந்தனைகள் என நீங்கள் கருதுவது எவற்றை?**

சுயாதீன வெளியில் சஞ்சரிப்பதற்கு நிபந்தனைகள் ஏன்? நிபந்தனைகள் அற்று இருத்தலே சுயாதீனமாக இருத்தல் எனப் பொருள் கொள்ளலாம். அகக் காட்சியில் ஓர் உருவம் இப்படித்தான் எனக் கருகலாக இருந்தாலும் வரையும் போது அது மாற்றமடைகின்றது. நான் இயங்குவதால் படைப்புருவாகும் அதே வேளை அப்படைப்பும் என்னை இயக்குகிறது. உருவை நான் இழுத்துச் செல்வதும் உரு என்னை இழுத்துச் செல்வதும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகின்றது. மனவெளியில் நடைபெறும் இவ்வுருவப்பயணம் ஓர் ஆன்மீகப் பயணமாக முடிவடைகின்றது. இந்தப் பயணத்தில் சித்திரத்தின் அடிப்படை விதிகள் என்னை அறியாமல் எனக்கு உதவுகின்றது. அடிப்படை விதிகளைக் கொண்டு முப்பரிமாணத்தைக் காட்டுவதோ, அல்லது சித்திர எறியத்தைக் (Perspective) காட்டுவதோ








அல்லது முற்குறுக்கத்தைக் காட்டுவதோ அல்லது நீர்வர்ணப் பிரயோகத்தைச் சரியான முறையில் செய்வதோ, இவையாவும் நீங்கள் கேட்ட நிபந்தனைகள் எனக் கூறலாம். எனினும் இவ்விதிகளையெல்லாம் கருத்திற் கொண்டு இவற்றிற்கே முக்கியத்துவம் கொடுத்து ஒரு படைப்பு உருவாக்கப்பட்டால் அது படைப்பாக இருக்காது. அது சமன்பாடுகளாகவே இருக்கும். உடல் இருக்கும். உயிர் இருக்காது. பீங்கான் கோப்பைக்குள் இருக்கும் தேநீரைச் சுவைக்கும் போது அது கீழே வீழ்ந்து உடைந்தால் என்னவாகுமென நினைக்கு மொருவரால் மேற்கொண்டு தேநீரைச் சுவைக்க முடியாது. இது போன்றது தான் நிபந்தனைகள் வழிச் சஞ்சரிப்புகளும்.

**04] நவீன ஓவியங்கள் சிக்கல் தன்மை வாய்ந்திருப்பதுடன் உள்வாங்கிக் கொள்ளவும் கடினமானவை என நிலவிவரும் நவீன ஓவியங்கள் பற்றிய பொதுவான கருத்திற்கு நீங்கள் தரக்கூடிய விளக்கமென்ன?**

எல்லோருமே மரபுவழி ஓவியங்களைப் பார்த்துப்பழகியவர்கள். எல்லோருமே ஓரளவு மரபுவழிச் சிந்தனை வட்டத்துக்குள் உட்பட்டவர்கள். திடீரென நவீனப்பாணி ஓவியங்களைக் காணும் போது அவற்றை உள்வாங்குவதில் சிரமப்படுவது சாதாரணமான ஒரு விடயம். அவர்களின் சிரமங்களைத் தவிர்ப்பதற்குப் பின்வரும் வழி முறைகளை முன்வைக்கலாம் என நான் நினைக்கின்றேன்.




1) இயன்றளவு; ஓவியங்களுக்கு தலைப்புகளை இடுவது.
2) நவீன ஓவியக்கலை கண்காட்சிகளை அடிக்கடி நடத்துவது.
3) இது தொடர்பான ஒரு விழிப்புணர்வைக் கருத்தரங்குகள் அல்லது செயலமர்வுகள் மூலம் ஏற்படுத்துவது.
4) பொது இடங்களில் நவீனபாணி ஓவியங்களைத் தொங்கவிடுவது. (உதாரணம்:- வைத்தியசாலைகள், வங்கிகள், புகையிரத நிலையங்கள், தபாற்கந்தோர்கள்)

நவீன ஓவியங்களைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் இருப்பதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியான ஓவியர்களும் காரணமாகின்றனர். இவர்கள் ஓவியர்கள் ஆகுவதற்கு முயற்சிப்பவர்கள்; ஆனால் ஓவியர்கள் அல்ல. இத்தகையவர்கள் பலரிடம் ஒரு 'தீப்பெட்டியைக்கூட'ச் சமவள வெறியமுறை அல்லது சித்திர எறியமுறையில் வரையும் 'திறன்' இருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. எந்த வடிவத்தினதும் சரியான அமைப்புத் இருந்தால் தான் அந்த அமைப்பை வசதி கருதிச் சிதைப்பதும் இலாவகமாக அமையும். தங்குதடையற்ற வெளிப்பாடு வரவேண்டுமானால் அந்த வடிவத்தின் கட்டமைப்புத் தெரிந்திருக்க வேண்டும். நவீனம் என்பது மரபில் இருந்து வித்தியாசப்பட்டது என விளங்கிக்கொண்டால் புரிதல் இலகுவாகும். நவீன வடிவமைப்புக் கொண்ட வாகனங்களைப் பார்க்கின்றோம். நவீன வடிவமைப்புக் கொண்ட கட்டிடங்களைப் பார்க்கின்றோம். நவீன தளபாடங்களைப் பார்க்கின்றோம். இவற்றையெல்லாம் கூட நாம் சில வேளைகளில் பயன்படுத்துகின்றோம். ஆனால் ஓவியங்கள், சிற்பங்கள் நவீனபாணியில் தரிசனம் தரும் போது முகத்தைச் சுழிக்கின்றோம். மேலும் எவ்வித முயற்சியும் இல்லாமல் பார்த்த; மாத்திரத்திலேயே நவீனப்படைப்புகளைப் புரிந்து கொள்ளலாம் என நாம் எண்ணுகின்றோம். சாதாரணமாக மனித உருவம் ஒன்றை யதார்த்தப் பண்புகளுடன் வரையத்தெரியாத பலர் நவீன ஓவியர்கள் என்ற போலி முகத்திரையுடன் ஒளிந்து கொண்டிருக்கின்றார்கள். இது மேலும் சிக்கல்களைக் கொடுப்பதாகவே இருக்கிறது. X என்ற உருப்பொருளைப் பார்க்கின்றோம் என வைத்துக் கொள்வோம். இந்த X இன் மூலகங்களை யெல்லாம் தவறவிடாத ஒரு வரைதாளில் பதிவு செய்வோமானால் X இன் செயற்பாட்டுக்குத் 'திறன்' கட்டாயம் வேண்டும் என்பது வெளிப்படையான ஓர் உண்மை. இந்தத் 'திறன்'மட்டும் கலையாகிவிட முடியாது. ஏனெனில் 'கலைஞர்' ஒருவரின் 'பார்வை' எப்படியானது என்பதை அவர் நிச்சயமாக எமக்குக் காட்டவேண்டும். அதனைத்தான் நாமும் எதிர்பார்ப்போம். இரு ஓவியர்கள் சிகரெட் பெட்டி ஒன்றைப் பார்க்கின்றார்கள் என வைத்துக்







கொள்வோம். ஒருவர் சிகரெட் பெட்டி எவ்வாறு தோற்றமளிக்கின்றதோ அவ்வாறு வரைகின்றார். மற்றவர் சிகரெட் பெட்டியின் அம்சங்கள் சிலவற்றுடன் பெட்டியின் கட்டமைப்பை மாற்றி அதனை ஒரு சவப்பெட்டியின் வடிவில்வரைகின்றார். இங்கு இரண்டாம் நபரின் ஆக்கமே ஆக்கத்திறன்மிக்கது. ஒவ்வொரு சிகரெட் பெட்டியும் மனிதனின் சவப்பெட்டியே என்ற கருத்து எளிமையாக வலியுறுத்தப்படுகின்றது. இது இரண்டாம் கலைஞர் எமக்குத் தந்த ஆக்கபூர்வமான ஒரு செய்தி. முதலாம் கலைஞர் எந்தச் செய்தியையும் எமக்குத்தரவில்லை. திறனுக்கு அப்பால் அவரால் நகரமுடியவில்லை. இவரைத் 'திறனுக்குள் சமைந்தவர்' எனக் கூறிக்கொள்ளலாம்.

எனவே படைப்பாற்றல் மிக்க ஒருவர் X இன் சில மூலகங்களை மட்டும் எடுத்துக் கொண்டு சிலவற்றை விடலாம். அல்லது தேவை கருதி X இன் மூலகங்கள் சிலவற்றைச் சிதைக்கலாம். அல்லது அவசியமெனில் X ஐ Y யாகவும் மாற்றலாம். இது கலைஞரின் கட்புலத் தீர்மானிப்புகளில் அடங்கும் விடயமாகின்றது.

**05] எந்தவொரு அகவெளிப்பாடாளரினதும் தாக்கமின்றி எவ்வாறு உங்களால் ஒருதனித்துவமான அகவெளிப்பாட்டாளனாக வெளிவர முடிந்தது?**

ஏற்கனவே நீலப்பறவை (Blue bird) என்ற ஓவியங்கள் பற்றிக் குறிப்பிட்டேன். இது சிறுவயது விடயம் என்பதால் அந்த ஓவியத்தை வரைந்த கலைஞரின் பெயரை என்னால் குறிப்பிடமுடியவில்லை. இந்த ஓவியம் என்னுள் வித்தியாசமான முறையில் ஓர் அகச்சலனத்தை ஏற்படுத்தியது. நவீன ஓவியங்கள் பற்றிய எந்தவிதமான முன்னறிவும் இன்றிக்காரணம் தெரியாமல் இதனை விரும்பி இரசித்தேன். எனவே இந்த அகவெளிப்பாட்டாளரின் தாக்கம் என்னுள் இருந்தது என்றே கூறுவேன். யாழ் இந்துக் கல்லூரியில் தரம் 8 படிக்கும் போது பிக்காஸோவின் 'மூன்று நடனகாரர்கள்' (Threedancers) என்ற ஓவியத்தை ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றில் பார்த்தேன். இந்த ஓவியமும் அந்நேரத்தில் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனது 16 ஆவது வயதில்; மேற்படிகல்லூரியில் அண்ணளவாக 100 ஓவியங்களைக் கொண்ட ஓவியக் காட்சி யொன்றுநடத்தப்பட்டது. இந்த 100 ஓவியங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் தூள் வர்ணத்தினால் வரையப்பட்டன.

L.S.D என்ற போதைப்பொருள் கொடுத்த மயக்கத்தில் கனவு உலகொன்றில் சஞ்சரிக்கும் 'கிப்பி' (இவர்கள் கட்டுப்பாடுகள் எவையும் அற்றவர்கள்) ஒருவரை ஓவியமாக வரைந்தேன். மிகவும் நவீன பாணியில் அமைந்தது. இந்த ஓவியத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட பிக்காஸோவின் ஓவியத்தின் சில அம்சங்கள் இருந்தன. இந்த ஓவியத்தை விடயமறிந்த மிகச்சிலர் பாராட்டினார்கள். முற்று முழுதாகப் பிக்காஸோவின் ஓவியத்தை இது ஒத்தது என்று கூறிவிட முடியாது. அந்த ஓவியத்தின் தாக்கம் எனது அகத்தில் இருந்தது. எனது படைப்புகளை முதலாவதாக இரசிப்பதும் அவை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதும் எனது தமையனார் கேதாரநாதனே. எனது உந்து சக்தியாக விளங்குபவரும் அவரே. எனது முதலாவது அக வெளிப்பாடாக மேற்குறிப்பிடப்பட்ட ஓவியத்தைக் குறிப்பிடலாம்.

**06] உங்களது அகவெளிப்பாட்டில் வாலாயமாகும் வர்ணம் அல்லது வர்ணங்கள் ஏவை?**

இந்த வர்ணங்கள் தான் என நிறுதிட்டமாக எந்த வர்ணங்களையும் குறிப்பிடமுடியாது. நிறங்கள் எவற்றையும் நல்ல நிறங்கள் கூடாத நிறங்கள் எனப் பிரிக்கவும் முடியாது. சங்கீதத்தில் எல்லா ராகங்களும் தேவையானவையே. அந்தந்த இடங்களில் அந்தந்த இராகங்கள் தேவைப்படும். எனது ஓவியங்களைப் பற்றி எழுதிய பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கடும் நிறங்களை நான் பயன்படுத்துவதாக குறிப்பிட்டிருந்தார். பொதுவாகச் சிறு பிள்ளைகள் தான் கடும் நிறங்களை பயன்படுத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார். இவர் சொல்லாமல் சொல்வது என்ன எனில் எனது ஓவியங்கள் சிறுபிள்ளைகள் வரைந்த ஓவியங்களைப் போன்றன என்பதே ஆகும். இந்த மாணவர் ஓவியத்துறை சார்ந்தவரல்லர். கன்றுக்குட்டி நிலையில் இருப்பவர். இவரின் கருத்துக்கள் பல இடங்களில் அபத்தமாகவும், தொடர்பற்ற மொழிப் பிரயோகங்களிலும் இருந்தன. மென்மையான நிறப்பிரயோகம் செய்பவர் முதிர்ந்த ஓவியமேதை எனவும் புதிய கண்டு பிடிப்பொன்றையும் கண்டு பிடித்துள்ளார். பல ஓவியர்கள் தமக்குள் இருக்கும் அச்ச உணர்வு காரணமாகக் கடும் நிறங்களைக் கையாள்வதில்லை. இவர்கள் இருண்ட, மென்மையான நிறங்களைப் பாவிப்பார்கள். 'இரத்தசோகை' என ஒரு நோயுள்ளது. இருண்ட, மென்மையான பிரகாசமற்ற நிறங்களை எப்போதுமே பாவிப்பவர்கள் ஒரு வகையில் 'நிறச்சோகை' நோய்க்குள்ளானவர்கள். எப்போதுமே முழுப்படைப்புகளிலும் இருண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரகாசம் அற்ற நிறங்களை ஒரு ஓவியர் பயன்படுத்துவாரேயானால் நிறங்கள் தொடர்பான அச்சவுணர்வொன்று அவர் ஆழ்மனதில் எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**07] ஒரு நிகழ்வு தொடர்பான உங்களது அகவெளிப்பாட்டைக் காட்சிப்படுத்த எடுக்கும் கால இடைவெளி எவ்வளவாயிருக்கும்?**

ஒரு நிகழ்வானது என்னைப்பாதித்துள்ளது என வைத்துக் கொள்வோம். பாதிப்பு அடைந்தவுடன்; உடனேயே அதைப் படைப்பாக்க நான் முயல்வதில்லை. இப்பாதிப்பு எனது மனதில் நீண்டகாலமாகக் 'கிடப்பில்' கிடக்கும். இது தொடர்பாக அகக்காட்சி யொன்று எப்போதும் மனதில் வந்து போகும். வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவ்வேலைகளுக்குப் பங்கம் வராமல் இந்நினைவு எப்போதும் செயற்பட்டுக் கொண்டேயிருக்கும். நிறத்தெரிவுகள், வடிவங்கள் இவையாவும் காட்சியாகும். ஒரு 'பழம்' பழுக்கும் நிலைபோல் தான் இதுவும். இதற்கு மாதங்கள் பல எடுக்கலாம். 'கிரிஷாந்தி' யின் நினைவு தொடர்பான இந்தச் செம்மணிப்படைப்பும் வருடக்கணக்கில் கிடப்பில் கிடந்ததுதான். பழம் பழுத்த பின்பு நாம் அதனைப் பயன்படுத்துவோம். அது போல் இந்த ' அகக்காட்சியும்'' பழுக்கும் 'கவிநிலை' வந்தவுடன் கூரான ஈட்டியொன்று வேகமாக வெளிப்பட்டது போல் படைப்பாக்திடலில் வர்ணங்களினாலும் கோடுகளினாலும் பதிவாகின்றது. பாதித்தநிகழ்வை உடனே ஓவியமாக்குதல் என்பது பூ , பிஞ்சு அல்லது காய் நிலைக்கு ஒப்பானது. காலஇடைவெளி என்பது முக்கியமானது. ஏனெனில் படைப்பானது உறுதியாகவும் உயிர்ப்பாகவும் வருவது இக்கால இடைவெளியில்தான். கிடப்பில் கிடந்தகாட்சியானது ஓவியமாகும் போது நூறு வீதமும் அப்படியே வருமென்று இல்லை மனதில் சில மாறுதல்களுக்கு உள்ளாகித்தான் வெளிவருகின்றது.

(மிகுதி அடுத்த இதழில்)

<u>**வாசகர் கடிதம் தொடர்ச்சி**</u>

குறிப்பிட்டவர்களில் ஒருவர் நீண்ட காலப் போராளியாகச் செயற்பட்டு, ஒரு காலையும் இந்த மண்ணுக்கு கொடுத்தவர், அவரின் கள அனுபவங்கள் எத்தனையோ கதைகளில் புலப்பட்டிருக்கின்றன. விமர்சனம் அல்லது ஆய்வுகளுக்கு பரந்த வாசிப்பும் தேடலும் அவசியம். புதிய தரிசனம் சில போலிகளை இனங்கண்டு அவைகளை தவிர்த்து ஒரு நேர்வழியில் பயணிக்க வேணும் என எனது மடலை முடிக்கிறேன்.

தி. சீர்மாறன்

கிளிநொச்சி

# நிகழ்வுகளின் நினைவுகள்

நிகழ்வுகள் என் மனதில் விதையிட்டுக் கொண்டன.
அவ் விதையிலிருந்து நினைவுகள்...........
மறு பிறவியாய் முளைவிடுகின்றன.
அந் நிகழ்வுகள் என்மனதில்
மாற்றத்தை யேற்படுத்தத் தவறியதில்லை.
கடினமான காலங்களில்
நிகழ்ந்த நிகழ்வுகள்
நெஞ்சிலோர் நினைவுகளாய் மலர்ந்ததற்கு
நான்பிறந்த தேசமும் காரணம்.
குருதி வழிந்தோடி .......
தேசம் நனைத்தவோர் நிகழ்வுகளை
என் விழிகள் கண்டதுண்டு.
விழி விழித்து பாய் சுருட்டமுன்
சுற்றுப் புறங்களில் ............
சாவோலம் கேட்டுள்ளேன்.
நடந்த நிகழ்வுகளின் நினைவுகளை
மீட்டுப் பார்க்கையில் .............
நினைவு விதை பெரு விருட்சமாய்
பிறப் பெடுக்கின்றது.
அவ் விருட்சம் என் நெஞ்சில்
மாற்றத்தை உண்டுபண்ணி
தேச உணர்வுகளில்
நடைபோட வைத்துளது
அந் நிகழ்வுகளின் நினைவுகள்
ஆறாத வடுக்களாய்
உருப் பெறுகின்றன.
நாளையும் அந் நிகழ்வுகளின் நினைவுகள் என்னில்
துளிர் விடும்.
அப்போதுதான் உள்ளத்தின் காயங்கள்
ஆறாதிருக்கும்
உறுதியில் மறதி இருக்காது.





## சமகால நெருக்கடி நிலையும் யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் "தனியார்", "குடும்பம்", "சமூகம்" என்ற அலகுகளில் அதன் தாக்கமும்

(ஓர் உசாவலுக்கான அறிமுகம்)

பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா

அறிமுகம் :-

இக்கட்டுரையானது எமது சமூகத்தின் மத்தியில் இருந்து ஏற்பட்டுள்ள விரிசல் நிலை தொடர்பாக ஆராய்வதற்குரிய நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் சட்டக அமைவிற்கு " நிகழ்ந்த " பல சம்பவங்களும், அவற்றின் "விளைவுகளும்" தரமாக உபயோகிக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்விற்கு முன்னும் பின்னும் என்ற நிலைகளில் இங்கு ஏற்பட்ட, நிகழ்ந்த சமூகவியல் சார்ந்த சம்பவங்கள் எமது சமூகவிரிசல் பற்றி ஆராய்வதற்குரிய களத்தினை அமைத்துக் கொடுத்துள்ளன. இக்கட்டுரையாசிரியர் எட்டு வருடங்களுக்கு முன்னர் (1996/1997) இத்தலைப்பில் அன்று கிடைத்த சமூகவியல் தரவுகளைப் பயன்னபடுத்தி எழுதிய கட்டுரை முதலாம் பகுதியில் அவ்வாறே தரப்படுகின்றது. இரண்டாம் பகுதியில் இடம்பெயர்வின் பின்னர் ஆனால் A9 பாதை திறக்கப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட யாழ்ப்பாணத்துச் சமூகம் எதிர் கொண்ட விரிசல் நிலைகள் தொடர்பாக கிடைத்த தகவல்களுடன் விரிவாக ஆராயப்படும். இக்கட்டுரையை பிரசுரிப்பதன் நோக்கம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்து சமூகத்தினை ஓர் ஒழுக்கவியல் கொற்தளிப்பற்ற ஆனால் அமைதியான பண்பாட்டு விழுமியங்களை மதித்து நடக்கச் செய்யும் சமூகமாக எவ்வாறு ஆக்கலாம் என்பது பற்றிச் சிந்திப்பதற்கே ஆகும். மனித விழுமியத்திலும் ஒழுக்கத்திலும் மதிப்பும் அக்கறையும் உடையவர்கள் இக்கட்டுரையில் கவனம் செலுத்துவார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் -1

## சமகால நெருக்கடிப் போக்கும் தனியார் - குடும்பம் - உறவுநிலைகளில் அதன் தாக்கமும்.

இவ்வாய்வுக்கட்டுரையானது எமது சமூகத்தின் மத்தியில் உறவு நிலைகளின் விரிசல் தொடர்பாக ஆராய்கின்றது. இவ்வாய்விற்கு பலவகைப்பட்ட சம்பவங்களும் விளைவுகளும் தரவாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகச் சேகரிக்கப்பட்ட அத்தரவுகள் இவ்வாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. சமூகமாற்றம் என்ற நோக்கில் அம்மாற்றத்திற்கான வேலைத்திட்டங்கள் எந்நிலையில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன?, மக்களுக்கு எந்நிலைகளில் இருந்து அவை உணரவைக்கப்படுகின்றன? அவ்வாறு மாற்றத்திற்கேதுவான வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்பவர்கள் எவ்வாறு செயற்பட்டுக் கொள்கின்றனர்? சமூகத்தின் புறவய, அகவய முரண்பாடுகளை தனியார் - குடும்பம் - சமூகம் என்ற மூன்று அலகுகளில் அவர்களால் எளிதில் இனங்கான முடிகின்றதா?, என்பன போன்ற வினாக்கள் சமகால நெருக்கடிப்போக்குடன் தொடர்புபடுத்தப்பட்டு விளங்கப்படுத்தப்படும் ஒரு முயற்சியாகவும் இக் கட்டுரை அமைகின்றது.

இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் மிகத்திறந்த மனதுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நல்ல சமூகமொன்றின் மாற்றத்திற்கேதுவான அடிப்படையை விரும்பி, எதிர்காலச்சந்ததியினரின் ஆரோக்கியமான சிந்தனை உருவாக்கத்தினைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டோரும், சம்பந்தப்படுத்தப்பட்டோரும் இக்கட்டுரையிற் சொல்லப்பட்ட கருத்துக்களை திறந்த மனதுடன் உள்வாங்கிக் கொள்வார்கள் என்ற நல்நோக்கமே இக்கட்டுரையாக்கமாக அமைகின்றது. "எல்லோர்க்கும் எல்லோருமே எஜமானர்களாகி விட்டால் நேர்சீரான மாற்றம் ஏற்படுவதற்குப் பதிலாக அகப்-புற முரண்பாடுகளை அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்படும்'' இன்னொருவிதத்தில் குறிப்பிடுவதாயின் "சமூகத்தில் எல்லோருமே எஜமானர்களாகிவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதே சமூகத்தில் மாற்றம் என்பது உணரப்படாத நிலையில், ஒரு மதகுரு அங்கியையும் உருத்திராட்ச மாலையையும் தழுவிய நிலையில் சக்கிமுக்கிகல்லையும் குண்டாந்தடியையும் சுமந்த வண்ணம், அகிலத்தின் சமாதான நீதிவான்கள் என்ற விருத்தர்களாக விக்கினேஸ்வரப் பூஜையில் விக்கினம் களைவாய் என்று செபிக்கின்ற நிகழ்வுகளை ஒத்த மாற்றங்களை உணரப்படத்தக்கதாய் அமைந்து விடும்.

### வரலாற்று நோக்கில் சமகால நெருக்கடி நிலைகள்:-

சமூகத்தில் மாற்றம் என்பது இல்லாவிடில் அச்சமூகம் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படமாட்டாது. ஆகவே சமூகத்தின்மேனோக்கிய வளர்ச்சி, தேய்மானம் என்பன அக்குறிப்பிட்ட சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டே அளவீடு செய்யப்படுகின்றது. பொதுவாக சமூகவளர்ச்சி என்பது ஆக்க பூர்வமான (Constructive) அடிப்படையில், விலக்கப்பட வேண்டியவை நீக்கப்பட்டு, உரம் ஊட்டவேண்டியவற்றை வளர்த்தெடுப்பதிலேயே தங்கியுள்ளது. இப்போக்கில் மரபுவழியான அம்ங்களும் அடங்கியிருக்கின்றதாகையால், சமூகத்தில் ஏற்படுத்தப்பட இருக்கின்ற மாற்றங்கள் மிக அவதானமாக கையாளப்பட வேண்டியவையாக உள்ளன. சமகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிநிலைகள் பல இப்பாரம்பரிய அம்சங்களில் பராமரிப்பு போக்கில் பெரும்தாக்கத்தினை உருவாக்கி "தடங்கல்" நிலையை ஏற்படுத்தியிருப்பது என்பது சமூகவளர்ச்சியையல்லாது சமூகத்தின் மத்தியில் குழப்ப நிலையையே உருவாக்கியிருப்பதாகப் பெரும்பாலும் அளவீடு செய்யப்படுகின்றது. எனவே ஆரோக்கியமான சமூகத்திற்குரிய அடிப்படைகளை உள்வாங்கிக் கொண்டவர்கள் ஆக்கத்திற்குதவும் " மரபு அலகுகளை " தனித்துவமாக இனங்கானக்கூடிய ஆற்றலுடையவர்களாகவும் செயற்படவேண்டும் என்பது அழுத்தாமல் உணரப்படவேண்டிய தொன்றாகும்.

இழந்த உரிமைகளையும், சீரழிக்கப்பட்ட வாழ்வு முறைகளையும் மீண்டும் உணர்வதற்கான மீளமைத்துக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை

தற்காலிகமாகவேனும் உருவாக்கிக் கொடுக்கவேண்டிய அடிப்படையாக இருக்கவேண்டும். அத்தகையதோர் கட்டபாடு என்பது மாற்றத்தினை முன்னெடுத்து செல்பவர்களுடைய அவசியத்தேவையை நோக்காகக் கொண்டு (தமிழ்மொழி பேசும்) ஒரு சமூகமானது தன்னை ஒழுங்கமைத்ததா? அவ்வாறு ஒழுங்கமைத்த நிலையில் மாற்றங்களை உள்வாங்கியுள்ளது என்று கூறுவதைவிட மரபணுக்களை தவிர்த்துவிட்டு மாற்றங்களை உள்வாங்கும் 'கட்டாயநிலைக்கு' உட்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவதே பொருத்தமானது. உரிமைகளைப் படிப்படியாக இழந்து வந்த அதேநேரத்தில், படிப்படியாக வாழ்வின் அடிப்படை வசதிகளையும் (தமிழ்ச் சமூகம்) இழந்து தவிக்கவேண்டிய தவிர்க்கமுடியாத நிலைக்குள் இப்பொழுது தள்ளப்பட்டுள்ள முறைமையை வாழ்வுமுறையின் பரிணமிப்பே அடிப்படையான காரணமாக அமைந்ததைக் காணலாம்.

இதனால் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதற்குத் தேவைப்பட்ட தனிமனித உழைப்பானது மேலும் பல மடங்கு நேர உழைப்பாக மாற்றமடையவேண்டிய நிலையும் புதிதாகத் தோற்றம் பெற்றது. இயந்திரங்களினால் ஆற்றப்பட்டுக் கொண்டிருந்த பல பணிகள் மனித இயந்திரத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய இக்கட்டான நிலையும் தோற்றுவிக்கப்பட்டது. சிறப்பாக சேவைத்துறைகள் விரிவடைவதற்கடிப்படையான "போக்குவரத்து அலகு" ஸ்தம்பிக்கப்படுவதற்கான அபாயகரமான வேலைத்திட்டங்களே முன்னெடுத்துச்செல்லப்பட்டன. இதனால் பல மடங்கு உழைப்புச் சக்தியை வெளியிட்டு, தனிமனித, குடும்ப செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதன் மூலமே அச்சமூகம் எதிர் நோக்கியிருந்த போக்குவரத்துச் சேவையை நிரப்புவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதனால் தனிமனித - குடும்ப உறவு நிலைகளில் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதற்கு வழியமைக்கப்பட்டது. பலமடங்கு சக்தி வெளிப்பாட்டின் ஊடே " மிகச் சிறியளவு பலனையே " பெற்றிருக்க கூடிய துர்பாக்கிய நிலையானது அபிவிருத்தியடைந்து கொண்டு வரும் நாடொன்றில் - அதுவும் எவ்விதத்திலும் இயற்கைவளமில்லாத - எளிதில் கிடைக்க முடியாத ஒரு பிரதேசமொன்றில் சமூக அழிவிற்கே வழிவகுத்து கொடுத்துவிட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலையை இன்று காண்கின்றோம். இதனால் பல குடும்ப அமைப்புகள் தத்தமது "வாழ்வுப் புலத்திலிருந்து" இடம்பெயர வேண்டிய அல்லது பின்னடைய வேண்டிய நிலை ஏற்பட்டமை தவிர்க்க முடியாததாகிற்று. இடப்பெயர்ச்சியினால் பல சமூகவியற் பிரச்சினைகள் தோற்றம் பெறுவதற்கும் வழிசமைக்கப்பட்டது.

தனிமனிதவுணர்வுகள் பல நிலைகளிலும் பாதிப்படைதற்குரிய நடைமுறைகள் தோற்றம் பெறுவதற்கேற்ற "வேலைத்திட்டங்களே" சுமந்து செல்லப்பட்டன. பாதிப்புக்குள்ளாகும் திட்டமிட்ட நிறுவன செயற்பாடுகள் வடிவமைத்துக் கொடுக்கப்படாதவொரு நிலை "இவ்வுரிமைமீட்புப்பணியிலே" மேலோங்கியிருந்தமைக்குரிய காரணம் எது என்பதனை இற்றைவரைக்கும் விளங்க முடியாத நிலை இருந்துவந்துள்ளது.

குடும்பஉறவு பாதிப்பு அடையும் நிலையில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் அவற்றை நிரைப்படுத்தி - மரபு வழியில் தணிவுமுறையை உபயோகித்து - அவற்றைத் தீர்த்து வைக்கின்ற வழியில் "நிறுவன அமைப்பு" எவையும் அக்கறை கொள்ளவில்லை. பதிலாக குடும்பஉறவு நிலைகளின் இறுக்கத்தன்மையை " பிளவு படுத்துவதாகவே" செயற்பாடுகள் மேலோங்கியிருந்தன. இதனால் குடும்ப வாழ்வில் தளர்ச்சிப்போக்கு, ஸ்திரமற்றநிலை, விரக்தியுணர்வு ஆகியன எல்லாமட்டங்களிலும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஸ்திரமற்றநிலையுடன் விரக்தியுணர்வு மேலோங்கும் போது குடும்பவாழ்வு சமூக - ஒழுக்கவிதிகளை மீறி அமைய வேண்டிய ஒரு தன்மைக்கு மாற்றியமைக்கப்படுகின்றது.

இதன்பயனாக தனியார் நிலையில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமையை பல சான்றுகளுடன் கண்டு கொள்ள முடிகின்றது. உளவியல் ரீதியான பலயீனம் ஆண்-பெண் இருபாலரையுமே பாதித்திருப்பதனை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. 'உண்ட கலத்தில் இட்டமலம்' காரணமாகவே பலர் உளரீதியான பாதிப்பினை அடையக் காரணம் என்பது புலனாகியது. உரிமம் சம்பந்தமான பிரச்சனைகள் சமூகத்தில் எழும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அதனைக்

'கையாண்ட முறைகள்' பக்குவமற்றமரபு அலகுகளைப் புரியாத நடைமுறைகளாக அமைந்திருந்த சமூகத்தின் "சித்த - சுவாதீனமற்ற" நிலை உருவாக காரணமாயிற்று. பெருமளவுக்குப் பெண்களே இந்நிலைக்குட்படுத்தப்பட்டனர். என்றால் அதில் தவறேதும் இருக்கமுடியாது. என்ன காரணம்? இன்னொரு வழியில் உளவியல் ரீதியான தாக்கத்தின் வெளிப்பாட்டினை சிறப்பாக 'இளைஞர், முதியோர்' உறவு நிலையில் ஏற்பட்ட விரிசல் நிலையிலிருந்தும் கண்டு கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

எமது சமுதாய அமைப்பில் 'முதியவர்களின்' நிலையானது இதுவரைகாலமும் புராண கலாசாரத்துடனேயே இணைந்து வந்தமையை உணரத்தவறியமை சமூகத்தின் ஒரு பிரிவினரை - அனுபவமட்டத்தினரை தன்வயப்படுத்தும் முறையிலிருந்து தப்பிவிடப்படக் காரணமாகியது. ( இதுவே இளைஞர், 'முதியவர் இடையில் பெரும் "விரிசல் நிலை" தோற்றம்பெறுவதற்கும் காரணமாகியது.) சமூகத்தில் நிகழும் முக்கிய வைபவங்களிலும், சடங்குகள் சமய விழாக்களிலும் தமக்குரிய 'முன்னணி நிலையை' இவர்கள் தேடிக் கொண்ட தேட்டமாகக் கொண்டிருந்தனர். இத்தேட்டத்திற்குரிய குடும்ப சமுதாய சூழ்நிலைகளை தமக்குச்சாதகமாக வைத்திருப்பதிலேயே முதியவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர். இதன் அடிப்படையில் "தம்மை கௌரவத்திற்குரிய பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்வதிலும் - அச்சூழலில் சமூகப்பிரச்சனைகள் பலவற்றை "பஞ்சாயத்து முறையில்" தீர்த்து வைத்தும் வந்துள்ளனர். இத்தகைய 'கௌரவத்திற்குரிய' அவர்களது நிலைக்கு 'சாவுமணி அடிக்கும் வகையில்' சமூகமாற்றத்தினை வேண்டிநின்றோரின் கொள்கை செயற் திட்டங்கள் அமைந்தன. இக்கொள்கை செயற் திட்டங்களை முன்னெடுத்தவர்கள் பெருமளவுக்கு இளைஞர்களாகையால் இயல்பாகவே இளைஞர் - முதியோர் இடையே விரிசல் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாயிற்று. இந்நிலையானது மேலும் இளையதலைமுறையினரின் வெளிநாடுகள் நோக்கிய புலப்பெயர்ச்சியினால் மேலும் சிக்கலான ஒரு நிலையை அடையக் காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தலைமுறையினரின் வெளிநாட்டு மோகம், அல்லது வாழ்வுப்புலத்திலிருந்து வெளியே தள்ளப்படும் நிலையானது "கூட்டுக்குடும்ப அமைப்பு மாதிரியிலான வாழ்வு முறையில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தவும் தவறவில்லை. இதுவும் முதியவர்களின் தலைமைத்தன்மை 'உடைவு' அடையக்காரணமாயிற்று. 'கூட்டணி' வாழ்வில் இதுவரையில் மேலாதிக்கம் செலுத்திய 'முதியவர்கள்' தமது தலைமைப்பதவி பறிபோவதை சிறிதளவேனும் விரும்பாதவொரு நிலையிலே மாற்றத்தினை நோக்கிய இளைஞரை சீற்றத்தோடு நோக்கவாரம்பித்தனர். இதனால் தமது சிந்தனை நடைமுறைகளை தவறெனச் சுட்டிக்காட்ட முயலும் இளைய தலைமுறையினர் மீது தாம் 'அனுபவசாலிகள்' என்ற குண்டாம்தடி கொண்டு அடிக்கமுயற்சிப்பதனையும் காண்கின்றோம். சமகாலச் சிந்தனையில் ஏற்பட்ட 'முன்னேற்ற' உணர்வுடன் கூடிய இளைஞர், யுவதிகளது சந்திப்பினைக் கூட முதியவர்கள் வெறுக்கின்றனர். தமக்குள்ளே தமது பழம்பெருமையினை - திறமையினை எண்ணி எண்ணி வியப்புறுகின்றனர். தொடர்ந்து தமது கைக்குள்ளேயே இளைய பரம்பரையினரின் அசைவியக்கத்தனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க விரும்பும் இவர்கள் குடும்பப்பிரிவு-தனிமனித இழப்பு-மனித வாழ்வில் ஏற்பட்ட அவலம் காரணமாக உளவியற் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அரசியல், பொருளாதாரக் காரணிகளின் உந்துதலினால் வெளிநாடுகளுக்கு இளைஞர், யுவதிகள் இடம் பெயர்ந்து சென்றபோது முதியவர்கள் தனித்துவிடப் படுவதற்குள்ளாக்கப்பட்டனர்.

இளைய தலைமுறையினரின் குடும்பப் பிரிவுகளைப் பொறுக்கமாட்டாத நிலையிலும் ஈட்டிக்கொண்ட தேட்டத்தினை தொடர்ந்து பாதுகாக்கும் பணியில் அம்முதியவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனையே இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் நாம் காண்கின்றோம். பராமரிப்பாளர் எவருமேயின்றி வயோதிபத்தின் தாக்கத்துக்கும் தாக்கு கொடுத்த வண்ணம் இன்று வாழ்ந்து கொண்டிருப்பதனை காணலாம். இந்நிலையில் மேலும் இயல்பான

வாழ்விடங்களில் இருந்து பின்தள்ளப்படும் பிறிதொரு சமூகப்பெயர்ச்சியால் இம் முதியவர்களது தள்ளாத வயது மேலும் பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. ‘ மாற்றத்தினை மனதில் சுமந்த வண்ணம்’? இடம்பெயரும் மக்கள் முதியவர்களை தனித்தே விட்டு விட்டுச் செல்கின்றார்கள். இதனால் மீண்டும் ‘தேடியதேட்டம்’ சுவீகாரநிலையில் முதியவர்களைத் தழுவிக்கொள்வதனைக் காணலாம். இது இளைஞர்களிடையேயும் - முதியவர்களிடையும் உறவடிப்படையிலான - குடும்ப - விலக்கடிப்படையிலான விரிசல் நிலையை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிற்று.

இவையே தற்போதுள்ள நிலையில் தனியாள் - குடும்ப சமூகநிலைகளில் சமகால நெருக்கடிப் போக்கினால் ஏற்படுத்தப்படும் தாக்கமாக அமைவதனைக் காணலாம். வாழ்விடங்களைவிட்டு விலகும் இடப்பெயர்ச்சிக்கும் நாடுவிட்டுநாடு தாவும் புலப்பெயர்ச்சிக்கும் இடையிலான நிகழ்வுகளின் பின்னணியில் (தமிழ்பேதம்) ஒரு சமூகத்தில் தனியார் - குடும்பம் - சமூகநிலை ரீதியாக ஏற்படுத்தப்பட்ட தாபங்களால் மறையக்கூடாத மாறக்கூடாத மரபும்-பண்பாடும் மறைந்துபோக வைப்பது வேதனைக்குரிய ஒன்றாக உள்ளது.

---

## யாருடன் யார் வாழ முடியும்

*நீருக்குள் மனிதன் வாழ முடியாது.*
*நீரின்றி மனிதன் வாழ முடியாது.*

*நெருப்புக்குள் மனிதன் வாழ முடியாது.*
*நெருப்பின்றி மனிதன் வாழ முடியாது.*

*புயலுக்குள் மனிதன் வாழ முடியாது.*
*காற்றின்றி மனிதன் வாழ முடியாது.*

*உன்னுடன் நான் வாழ முடியாது.*
*என்னுடன் நீ வாழ முடியாது.*

*நீ இன்றி நான்வாழ முடியாது*
*நான் இன்றி நீ வாழ முடியாது.*

**க. சாரங்கன்**
**அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழர் சூழலில் பிறமொழி அறிவின் தேவை

**கவிஞர் இ.முருகையன்**

இன்று எந்தவொரு மனிதக் கூட்டமும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றறியாமல் வாழ்வது கடினம். பெரும்பாலான நாடுகளில் எல்லாம் பன்மொழிப் பயிற்சி காணப்படுகிறது. இயல்பான பன்மொழிச் சூழலில் மட்டும்தான் இந்த நிலை உண்டு என்றும் நாம் சொல்லிவிட முடியாது. பல்வேறு தேவைகளை முன்னிட்டு இன்று ஒரு நாட்டிற் பிறந்த பலரும் பிற நாடுகளிற் சென்றிருந்து வாழ்கிறார்கள். இதனால், இவர்கள் பலவகைப்பட்ட பன்மொழிச் சூழல்களிலே தோய்ந்து வாழ வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

தொழில்களின் பொருட்டும் கல்வியின் பொருட்டும் பிறமொழியாளர் மத்தியிலே “புழங்க” வேண்டியவர்களாய் நாம் உள்ளோம். இதற்கிடையில், நம் வாழ்க்கையிலே தமிழ்மொழியின் இடம்பற்றியும் ஆட்சி உரிமை பற்றியும் கேள்விகள் பல சொந்த மண்ணிலே கூட எழுப்பப்படுகின்றன. ஏன், தமிழ்நாடு என்று பெயர் சூட்டிக் கொண்டுள்ள சென்னை மாநிலத்திற்கூட, தமிழ் புறக்கணிக்கப்படுகிறது. சிற்சில இடங்களிலே சிற்சில சாரரால் போற்றப்பட்டாலும் கூட, பற்பல இடங்களிலே அது அலட்சியம் செய்யப்படுகிறது. குறைத்து மதிக்கப்படுகிறது. மிகச் சிறு வயதிலேயே தமிழ்க் குழந்தைகள் தமிழைத் துறந்துவிடுமாறு தூண்டப்படுகிறார்கள்; நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். தமிழர்கள் தமிழினை எவ்வளவு விரைவில் இழந்து விடுகிறார்களோ, அவ்வளவுக்கு அவர்களுடைய செல்வம், செல்வாக்கு, வாழ்க்கைத்தரம், அதிகார மேன்மை ஆகியன எல்லாம் உயர்வடையும் என்ற மாயை கட்டி எழுப்பப்படுகிறது. தமிழர் தம் சொந்த வரலாறு முழுவதையுமே தூக்கி வீசிவிட்டால், சோலியே இருக்காது என்னும் எண்ணம் மேலும் வளர்க்கப்பட்டு வருகிறது.

ஆட்சிப் பீடத்திலும் எதிர்தரப்பிலும் உள்ள அரசியல் வாதிகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒவ்வொன்றைச் சொல்லக்கூடும். பொது மேடையில் எழுப்பப்படும் கொள்கை விளக்கங்களும் முழக்கங்களும் எப்படி எல்லாமோ இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையிலே, கேட்போரின் காதுச் சவ்வுகள் உடையும் படியாகச் சத்தம் போடலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை; தமிழர் பண்பாட்டின் உயரிய கூறுகள் உட்பட, நம் முதுசொத்து முழுவதையுமே மதிப்பிறக்கம் செய்து சமூகம் முழுவதையுமே கையாலாகாத 'பிறவி' களின் கும்பலாக்கும் திசையிலே தான் நாம் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு காலத்திலே தாய்மொழி மூலமான கல்வியினை ஆர்வவேகத்துடன் முன்னெடுத்த நாடு இலங்கை. ஆனால், இன்று சிங்கள வழிக்கல்வியும் தமிழ்வழிக் கல்வியும் புறக்கணிக்கப் படுகின்றன. கொலனி ஆதிக்க காலத்தில் இருந்தது போல, உயர்கல்வி முழுவதையுமே மீண்டும் ஆங்கிலமயமாக்கும் முயற்சிகள் வளர்ந்து வருகின்றன. உயர் கல்வியை மாத்திரமல்ல-தொடக்கநிலைக் கல்வியைக்கூட ஆங்கிலமயப் படுத்துவதற்குச் சில தரப்புகள் அவசரப்படுகின்றன. அமெரிக்க அறிஞர் முனைவர் சாம்யுவெல் ஃவிஸ்க் 'கிறீன் (Dr.SAMUEL FISK GREEN) அவர்கள், யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் கி.பி.1848 ஆம் ஆண்டிலேயே தமிழ் மூலம் மேற்குநாட்டு மருத்துவக் கல்வியினையே தொடங்கி நடத்திக் காட்டினார். எங்கிருந்தோ இங்கு வந்த அந்த அறிஞர் அந்த அரிய காரியத்தை சாதித்து, தமிழ்மொழியின் ஆற்றலையும் அதன் சாத்தியப் பாடுகளையும் உணர்ந்து பணியாற்றினார். இதைப் பலர் மறந்திருக்கலாம்.

கல்வி மொழி மாற்றங்கள் பற்றி ஆலோசனைகள் நடைபெற்ற போது - சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலே - இலங்கைப் பல்கலைக்கழகத்து மூதவையிலே (Senate) தாய்மொழி மூலமான உயர் கல்வியின் சாத்தியப் பாட்டையும் அவசியப்பாட்டையும் வற்புறுத்தி வலியுறுத்தி வாதாடியவர்கள் யார்? அணு விஞ்ஞானியாகிய ஆ.வி.மயில்வாகனம், கணிதமேதை சி.ஜே.எலியேசர் ஆகிய தமிழ்ப்





பெரியோர்கள் தான் என்பது நினைவு கூறத்தக்கது. சிங்களப் பேராசிரியர்கள் உட்பட, துறைசார் அறிஞர்கள் பலரின் எதிர்ப்புகளுக்கெல்லாம் பதில் வாதங்களை முன்வைத்து விளக்கியவர்கள், இந்தப் பெரியவர்கள். தாய் மொழிவாயிலான உயர்கல்விக்கு வித்திட்டு வளர்த்தவர்கள் இந்தப் பெரியவர்கள்.

இந்தத் தொடக்கங்களைத் தொடர்ந்து, இலங்கைப் பல்கலைக் கழகமும், பின்னர் அந்தப் பல்கலைக்கழகங்களின் வளாகங்களும் தாய்மொழி உயர் கல்வியை வளர்த்து எடுத்தன. இது வரலாறு.

இந்த வளர்ச்சிக்கு உதவியாக, இலங்கை அரசகரும மொழித் திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவும், பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் ஏராளமான உயர் கல்வி நூல்களை வெளியிட்டு, தாய்மொழி உயர் கல்வியினை நிலைநாட்டின. இதுவும் வரலாறு தான்.

இவற்றை ஒத்த பணிகள் சென்னை மாநிலத்திலும் நடந்தேறி உள்ளன. அங்கும், அனேகமாக, ஆட்சிப்பொறுப்பேற்ற அரசுகள் யாவும் தமிழ்வழி உயர் கல்விக்குப் பக்கத் துணையாய் நின்று உரம் சேர்த்துள்ளன. என்றாலும் அண்மைக்காலப் போக்குகள், தமிழ்வழி உயர் கல்வியின் எதிர்காலம் பற்றி நல்ல சகுனங்களைக் காட்டுவனவாய் இல்லை.

**ஆரவாரங்கள்**

உலகமயப்பாடு பற்றிய பிரசாரங்களும் பகட்டு விளம்பரப் போக்கிலான மிகைப் படுத்திய புளுகுகளும், ஆங்கிலத்தின்பால் இளைய தலைமுறையினை இழுத்துச் செல்வதில் கணிசமான அளவு வெற்றி கண்டுள்ளன. இதனை மறுப்பதிற்கில்லை. இந்த ஈர்ப்பும் பயன் சிறந்த தொடர்பாடற் கருவியாகிவிட்ட ஆங்கிலமொழித் தேர்ச்சியின்பால் உண்டாகியுள்ள விருப்பும் கவர்ச்சியும் வரவேற்கத் தக்கவை; நன்மை பயப்பவை. இந்த உண்மைகளை மறுப்பார் இல்லை.ஆனாலும், இவற்றின் பக்கவிளைவாக, தன்னினம் பற்றிய பெருமிதமும் அபிமானமும் தேய்ந்துபோகும் ஆபத்தும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நாம் மறந்துவிடல் ஆகாது.

அத்துடன் தன்மொழிபற்றி ஒரு வகையான தாழ்வு மனப் பான்மையும் சேர்ந்து விடுமானால், அந்த அவலம் மிகவும் கொடியதாய் இருக்கும். இவை, மக்கள் மனப்பான்மையிலே தோன்றக்கூடிய பாதிப்புகள்.

சொந்த மொழியினை இளக்காரமாக நினைப்பதும் அதன் பயன்பாட்டைப் புறக்கணிப்பதும் மொழிவளத் தேய்வுக்கு இட்டுச் செல்லும் காரணிகளாய் மேற்கிளம்பக் கூடும். எந்த ஒரு கருவியும் கையாளக் கையாளத்தான் கூர்மை பெறும்; வினைத்திறன் வாய்ந்ததாய் மாறும். வெட்டாக் கத்திகள் விரைவிலே கறட்பிடித்துப் போகும். அவற்றை மண்ணிலே போட்டுக் கவனிக்காமல் மறந்துவிட்டால், அவை ஒன்றுக்கும் உதவாது புழுதாகிப் போய்விடும். ஒரு மொழிக்குழுமம், தானே தன் சொந்தமான தொடர்பாடற்கருவியைத் துருப்பிடிக்க விட்டு விடுமானால், அதைப்போன்ற தற்கொலை வேறேதும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட 'இனத்தற்கொலை' தான் எங்கள் தலைவிதியாக இருக்கப்போகிறது என்றால், அது பற்றி நாம் மகிழ்ச்சி கொள்ள முடியாது. தன்னடையாளத்தை விலை பேசி விற்றுப் பிழைப்பதைவிட இழிவானது வேறு யாது? பாரதிதாசனார் தம்முடைய பாட்டொன்றுக்கு "உன்னை விற்காதே!" என்று தலைப்பிட்டார். "இன்பம் வேண்டிப் பிறர்வசம் ஆவது" ஈனத்தனமான கீழ்ச் செயல் என்பதை உரத்துப் பேசாத இடமே அவருடைய பாட்டுக்களில் இல்லை என்று சொல்லிவிடலாம். காசுக்காக தன்னுடைய மானத்தை விற்றுச் சீவிக்கும் அற்பத்தனம் எவ்வளவு தாழ்ந்தது என்பதை நாம் அறிவோம். அதனைவிட கேடுகெட்டது, சுயமரியாதையை இழந்து" பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு/ நாமமது தமிழர் எனக் கொண்டு இங்கு" வாழ்ந்திருப்பதும்! இதனை நம்மவர்கள் எல்லாரும் மனத்தில் இருத்துவது நல்லது.

தம்மை விற்றுவிடக்கூடாது என்னும் உயரிய குறிக்கோளின் பொருட்டுத் தம்மையே தந்துதவிய சான்றோர்கள்-





தற்கொடையாளிகளின் வரிசை மிகவும் நெடியது.

எனவே, பிற மொழிகளைத் தேடிச் சென்று அவற்றிலே தேர்ச்சி பெற விரும்பும் நாம், நம் சொந்தத் தனித்தன்மைகளைப் பலியிட்டுவிடத் துணிவது மிகவும் ஆபத்தானது; சோகமானதும் கூட!

<u>செய்யத் தகுந்தது எது?</u>

அப்படியானால் நாம் செய்யத் தகுந்தது எது? இன்றைய சூழலிலே பல மொழித் தேர்ச்சியினை நாம் மனமுவந்து வரவேற்றல் வேண்டும். இரண்டு மூன்று மொழிகளையாவது தெரிந்திருப்பது மிகவும் நல்லது.

ஆனால் ஓர் எச்சரிக்கை! முதல் வேலையாக நாம் தமிழிலே கணிசமான தேர்ச்சி அடைதல் வேண்டும். அடுத்ததாக ஆங்கிலத் தேர்ச்சி வரலாம். இவற்றுக்கு பின்னர், இந்தி சிங்களம், தெலுங்கு, மலையாளம், ஏனைய ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க மொழிகள் என்பன வரலாம்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அவ்வந்நாட்டு மொழிகளிலே தேர்ச்சி பெறுவது உகப்பானது.

சுருங்கச் சொன்னால், பல மொழிகளைக் கற்றறிந்து பரிச்சயம் கொள்வது, இனி வரும் காலங்களில் பயனுள்ளதாய் அமையும்.

<u>பொறுமையின் விதைகள்</u>

பன்மொழித் தேர்ச்சி நல்லது என்றதும் எல்லோரும் பத்துப் பதினைந்து மொழிகளிலே திறமை பெற வேண்டுமோ என்று பயப்படத் தேவை இல்லை. அப்படிப்பட்ட விரிவான பன்மொழி ஆற்றல் எல்லோருக்கும் வேண்டியதொன்றும் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தத்தம் வல்லமைக்கும் தேவைப்பாடுகளுக்கும் அக்கறைகளுக்கும் ஏற்ப, இரண்டு மூன்று மொழிகளைக் கற்றுக் கொள்ள முயலலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்த ஒருவர், எந்த விடயத்தையும் ஒன்றுக்கு மேற்பட்ட கோணங்களிலே பார்த்து விளங்கி கொள்ளுகிறார். எங்களுக்கு இரண்டு கண்கள் இருப்பதனாலே தான், ஒரு காட்சியின் நீளம் அகலங்களை மாத்திரமன்றி அதன் ஆழத்தையும் நாம் உணர முடிகின்றது. ஒற்றைக் கண்ணால் மாத்திரம் பார்ப்போமானால், கடதாசியிலே அச்சடித்த தட்டைப் படம்போல, ஆழம் பற்றிய உணர்வைத் தெளிவாகப் புலப்படுத்தாத 'சப்பட்டைப்' பண்புள்ளதான ஒரு தோற்றம் தான் நமக்குத் தெரியும். ஆனால் இரண்டு கண்களாலும் புறவுலகை நோக்கும் போது, மூன்றாவது பரிமாணமும் நமக்குச் சிறந்த முறையில் உணர்த்தப்படும். ஒரே பொருளைப் பல கமெராக்களைக் கொண்டு பல கோணங்களிலும் படம் பிடித்துக் காட்டினால் அந்தப் பொருளின் பல்வேறு பண்புகளையும் நாம் நன்கு கண்டு விளங்கிக் கொள்ள முடியும்.

ஒற்றைப் பரிமாணத்திலான காட்சி பிழைபட்ட விளக்கங்களுக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடும். ஆனால் பல்கோண நோக்கு முழுமையான விளக்கத்தை நமக்குத் தரும்; எங்களுடைய புரிந்துணர்வுகளை அது விசாலமாக்கும். அதன்வழிக் கிடைக்கும் விரிவான புத்திக் கூர்மை, நோய்த்தன்மை வாய்ந்த பிடிவாதங்களுக்கு எதிரானது. அது பொறுமையின் விதைகளை மனித மனங்களிலே தூவி விடுகிறது. இப்படிப்பட்ட விசாலமான நிதானமான பார்வைதான் ஆரோக்கியமான பகுத்தறிவுப் பிரயோகத்துக்கு நம்மை இட்டுச் செல்லும்.

பிறமொழி அறிவினால் எய்தப்படும் நலன்கள் யாவற்றுள்ளும் தலைசிறந்தது இந்த விதமான பகுத்தறிவுப் பிரயோகமே ஆகும்.





# வாழவைப்பாய்!

காப்பாற்றும் பிள்ளையாரே
கடுப்படைந்து கேட்கின்றேன்
எங்களை ஏன் படைத்தாய்?

வயற்காற்று நிறைநிலா
அந்த வாழ்வு இனிவருமா?
நிலமற்று நலமற்ற
நலன்புரி நிலையம் இன்று
காப்பாற்றும் பிள்ளையாரே
எங்களை ஏன் படைத்தாய்?

அரிகல்லும் பொளிகல்லும்
அலங்கரிக்க உன்கோயில்
அரைமேய்ச்சல் இடிதிண்ணை
அலங்கோலம் எம்வீடு
கடுப்படைந்து கேட்கின்றேன்
எங்களை ஏன்படைத்தாய்?

உண்டியலும் தொண்டர்களும்
தண்டி உனை நிரப்புகின்றார்
உண்டகுறை குறையாக
மறுநேரம் தியங்குகிறோம்
காப்பாற்றும் பிள்ளையாரே
எங்களை ஏன் படைத்தாய்?

பாற்கஞ்சி பணம்பிட்டு
பழஞ்சோறு பால்வேறு
நிவாரணம் எதுதரினும்
எம்பச்சைத் தண்ணிக்கு ஒப்பேது?
கடுப்படைந்து கேட்கின்றேன்
எங்களை ஏன்படைத்தாய்?

அவல்பொரி அன்னதானம்
படைக்கின்றார் நீ உண்ணாய்
அழுது இரந்து கேட்டாலும்
அரைவயிறு நிரப்பிவிடார்.

காப்பாற்றும் பிள்ளையாரே
எங்களை ஏன் படைத்தாய்?

அருச்சனையோடு அபிஷேகம்
ஆறுவேளை நடக்குதப்பா
இடம் பெயர்ந்த கொட்டிலிலும்
ஏச்சுத்திட்டுக் கிடைக்குதப்பா
கடுப்படைந்து கேட்கின்றேன்
எங்ஙளை ஏன் படைத்தாய்?

பாவம் செய்தோம் பரிதவிப்போம்
வைத்திடுவோம் ஒருகதைக்கு!
களவு,பொய்,பாவம் செய்ய
காரணம் யார் பசிதானே
காப்பாற்றும் பிள்ளையாரே
எங்களை ஏன் படைத்தாய்?

கல்வெட்டு பத்திரிகை
விளம்பரமா கேட்கின்றோம
நெல்விளையும் எம்மூரில்
நிலைத்து வாழத்துடிக்கின்றோம்
தணிவடைந்து கேட்கின்றேன்
எங்களையும் வாழவைப்பாய்!

மூப்படையும் மனிதநேயம்
முகிழ்ப்புற்று நிலைக்க வேண்டும்
பண்பு மரபு ஊரெல்லாம்
சீராகப் பரவ வேண்டும்.
பணிவடைந்து வேண்டுகின்றேன்
எங்களையும் வாழவைப்பாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமில்லா மனிதன்

ஞானரதன்




நேற்றுப் பூத்திருந்த மல்லிகை மலர்கள் வாடிச் சொரிந்திருந்தன. புதிய மலர்கள் இன்று இடைநிரப்பியிருந்தன. என்றும் போலவே மல்லிகையின் நறுமணம், கால நகர்வோடு அழிந்து போகாமல், வியாபகம் கொண்டிருந்தது. காகங்களின் கரைதலோடு விடிந்த காலை இன்னும் இளமையை இழக்கவில்லை. கீச்சிடும் அணில், தொண்டையை நெளித்துக் கூவுகின்ற சேவல், மாமரக் கிளையொன்றில் கூடுகட்டும் தையல் சிட்டு, தூறல் மழையில் ஒளிக்கிரணங்கள் நிறங்களாக பிரிகின்ற அழகு எல்லாமே ஊழி நடனத்தின் ஒலி அதிர்வுகளுக்காக இயற்றும் தவமாக அவனுக்கு தெரிகிறதா?





மனிதர்கள் மனம் என்ற கற்பிதக் கூண்டுக்குள்ளேயே அடைபட்டுக் கொண்டு, தெரிதலையும், புரிதலையும், கோட்பாடுகளையும், சித்தாந்தங்களையும் வியாக்கியானம் செய்ய முயன்று பெற்ற அறிவுத்தேட்டம் அவனுக்குச் சலிப்பைக் கொடுத்திருக்கலாம். இந்த அறிவுத் தேட்ட மூலதனம் அவனுக்கு எவ்வளவு தூரம் வழித்துணைக்கு வரும் என்பதில் இப்போது ஐயம் ஏற்பட்டு விட்டதை அவன் எனக்கு உணர்த்திக் கொண்டிருந்தான்.

நீண்ட காலத்துக்குப் பிறகான சந்திப்பு அது. இப்படித்தான் எங்கள் சந்திப்புகள் திட்டமிடப்படாமல் இடைக்கிடை நிகழ்ந்தன. ஒவ்வொரு சந்திப்பிலும் புறரீதியாக மட்டுமே மாற்றமடைந்து போகிற எனக்கும் அகரீதியாகப் பாரிய மாற்றமடைந்து கொண்டிருக்கும் அவனுக்கு மிடை இருந்த இடைவெளி அகன்று நீண்டது.

அமைதி இடைவெளி விட்டு வெளிவரும் அவனின் நறுக்கான வார்த்தைகள் கூரிய ஆயுதங்களாக என் நெஞ்சில் இறுகின.

அவன் உலக ஓட்டத்தோடு ஓடாத மனிதன் என்பதைப் பல வருடங்களுக்கு முன்பே என்னால் அவதானிக்க முடிந்தது. அப்பொழுதும் எனது நண்பனாகவே இருந்தான்.

ஒருநாள் - அவன்,

தனது நான்கு வயது மகனின் பிறந்த நாளுக்கான பரிசாக அழகிய பொம்மை ஒன்றை வாங்கிக் கையில் வைத்திருந்த போது கடை வாசலில் நின்ற அவனின் மகனின் வயதையொத்த சிறுவனொருவன் ஆவல்மேலிடச் சிரித்தவாறு அந்தப் பொம்மையை தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். இதனால் ஈர்க்கப்பட்ட எனது நண்பன் பொம்மையை நீட்டி 'வேணுமா' எனக்கேட்டான். 'ஓம்' எனத் தலையாட்டினான் அந்தச் சிறுவன். 'இது நடக்கிற காரியமா' என்ற சிந்தனை வளர்ச்சி அச்சிறுவனுக்கு இருக்கவில்லை. அந்தப் பொம்மையை சிறுவனிடமே கொடுத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை வாசற்படியிறங்கி வெளியே வந்தான் அவன்.

'உனது மகனின் பிறந்த நாளுக்குப் பரிசுப்பொருள் ஏதும் வாங்கவில்லையா' எனக் கேட்டேன்.

'காசில்லை மச்சான்' எனக் கூறிச் சென்றுவிட்டான். அவனின் நடத்தை என்னை வியப்பில் ஆழ்த்தியது. மனைவியையும், மகனையும் வீட்டில் எவ்வாறு எதிர் கொண்டிருப்பான் என்ற சிந்தனையோடு நான் அகன்றேன். மனைவியுடன் ஏற்பட்ட சச்சரவு பற்றிப் பின்பொருநாள் விழுந்து, விழுந்து சிரித்தவாறு கூறினான்.

பின்பொரு நாள், அவனும் மனைவியும் கடைத் தெருவொன்றில் நடந்து கொண்டிருந்த போது எதிரே வந்து கொண்டிருந்த அழகிய பெண்ணொருத்தியைக் காட்டி 'நல்ல வடிவாக இருக்கிறாள்' அவன் வாய்விட்டு சொன்ன விமர்சனம் மனைவியின் ஏச்சும், கண்டனமும் பெற்றது.

'உதைத்தானா பார்த்துக் கொண்டு வாறீர்' என அவனை ஒரு மட்டரகமான மனிதனாக மனைவியிடம் அடையாளம் காட்டியது. உண்மையான முகம் அவனுக்கு எப்பொழுதுமே தொல்லை கொடுப்பதை அவன் அறிந்திருந்த போதிலும் அதை மாற்றிக் கொள்ளாமலேயே இருந்தான். அவன் சம்பாதித்த சங்கடங்களுக்கு எல்லாம் இதுவே காரணமாயிற்று.

அவன் குடியிருந்த வீட்டின் அருகே இருந்த தெருவோரத்தில் வயோதிபக் குணாம்சங்களுடன் ஒருவன் வீழ்ந்து கிடந்தான். மலம் கழித்திருந்த உடையோடு, அவன் சாகவில்லை - மயக்க மடையவுமில்லை. முனகிக் கொண்டிருந்தான். ஆண்கள், பெண்கள் எனத் தகவல் சேகரிப்பவர்கள் வந்து தலையை நீட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போயினர் - வசதிக்கேற்ற வாக்கு மூலங்களுடன்தான்.

மூக்கைப் பிடித்தவாறு எட்டிப்பார்க்காமலே போனவர்கள் தான் அதிகம் பேர்.





எனது நண்பனும் அங்கு வந்தான்.

அந்த மனிதரை அழைத்துச் சென்று தனது வீட்டுக்கிணற்றில் குளிக்கச் செய்து சாரமொன்றைக் கொடுத்து உடுக்க வைத்தான். மனைவியை மிரட்டி கோப்பி போட வைத்து கொண்டு வந்து கொடுத்தான்.

நடந்து போகாமல் பஸ்சில் போகச் சொல்லி இருபது ரூபாக் காசும் கொடுத்தான். அந்த மனிதர் விடைபெற்ற போது அவனைக் கையெடுத்துக் கும்பிட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை. 'போ! 'போ! எனத் துரத்தினான். 'நான் கும்பிடுகிற சந்நிதி முருகன் நீ தான் தம்பி' என்று அந்த மனிதர் கூறியது அவன் காதில் எட்டியது தான், அவனின் கோபத்தை உச்சத்துக்கு ஏற்றியது.

இவ்வாறான பல்வேறு சம்பவங்களை என்னால் கேட்க முடிந்தது. இருந்தும் வெட்டு ஒன்று துண்டு இரண்டென அவனை என்னால் அகற்றிவிட முடியாமலே இருந்தது. ஏதோ ஒன்று எங்கள் நிரந்தரப் பிரிவை தடுத்திருக்க வேண்டும். அவன் ஒரு வித்தியாசமான தளத்தில் நின்று கொண்டு இந்தப் பூவுலகின் பொய்மைகளோடு வாழ முயற்சிப்பது புரிந்தது. அதற்கான ஆத்ம பலத்தை அவன் எங்கிருந்து பெற்றான் என்பது தெரியவில்லை. ஆனாலும் அவனுக்கு அவனைச் சூழ்ந்திருந்த மனிதர்களால் 'பனியன்' என்ற பட்டத்தை மட்டுமே வழங்க முடிந்தது. இதில் எவ்வித கருத்து முரண்பாடுகளோ, மீள்பரிசீலனையோ எவருக்கும் எழவில்லை. அதன் பின்பு,

அவனின் மனைவி விவாகரத்துப் பெற்றது- நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கவிருந்த நாளன்று மகனுக்காக எடுத்துச் சென்ற இனிப்புப் பொட்டலத்தைத் திரும்பக் கொண்டுவந்தது.

அரச பணியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கையில் வேலை பறிபோனது மனைவிக்கும் மகனுக்கும் செலுத்த வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்பு பணம் செலுத்த முடியாமல் சிறை சென்று வந்தது - எல்லாமே 'இவன் ஒரு உதவாக்கரை' என்ற அரியாசனத்தில் அவனை ஏற்றிவைத்தன. அவன் அவனாக இருந்தான். அவனுள்ளும் அவனாகவே இருந்தான். அப்படியிருந்தால் மனிதனாக இருக்க உனக்கு இந்த உலகில் லாயக்கு இல்லையெனப் புறந்தள்ளப்பட்டு விட்டானா?

அவன் எனக்குள் விதைத்த விதை இது தானா?

உலகம் போற்றும் உன்னதங்களோடு, இணைவாக வாழ்ந்து, மரித்த மனிதர்களின் வழியில் இவனால் ஏன் பயணம் செய்ய முடியவில்லை என்ற கேள்வி, நாட்கணக்கில் தன்பாட்டில் உறைந்து போகும்வரை, என் ஆத்மாவைக் குடைந்து கொண்டே இருந்தது. பின்னர் 'மானிட மறதி' என்னைச் சமநிலைப் படுத்திவிடும். எப்போதாவது எரிமலைபோல் இதயம் குமுறி எழுந்து நினைவுகளைப் புதுப்பிக்கும்.

அவனிடம் காணப்பட்ட பண்புகளை வேறெந்த மனிதரிலும் நான் காணவில்லை. வாழ்க்கை பற்றி அவன் போட்ட விலை மதிப்பீடுகள் என்னை திணறடித்தன. என்னையும் ஒரு பாசாங்குப் பேர்வழியாக அவன் குறித்திருக்க கூடும். எல்லா மனிதர்களுக்கும் தமது வாழ்க்கையை உலகின் முன் ஒப்புக் கொடுக்க ஒன்று அல்லது பல முகமூடிகள் தேவைப்படுகின்றன. இல்லாவிடின் முகமிழந்த எனது நண்பனின் கதிதான் உனக்கும் என தூரத்துக்குரலொன்று எச்சரிப்பது கேட்கிறது.

சில மனிதர்களின் முகங்களை விரும்பியோ விரும்பாமலோ வாழ்க்கை பூராகச் சந்தித்துக் கொண்டே இருக்கிறோம். எனது நண்பனும் நானும் அவ்வாறு தான். ஏன் இப்படி நிகழ்ந்தது என்று எனக்கு தெரியவில்லை.

நீண்டகால இடைவெளிக்குப் பின்பொரு நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆளரவம் கேட்டு வாசல் கதவைத் திறந்தேன்.

வருடக்கணக்காக தண்ணீரைக் காணாத பரட்டைத் தலை, செம்பாட்டுப் புழுதி கலந்த நரை - எனது நண்பன் தான்.

கண்களைப் பொத்திச் சிரிக்கும் அதே சிரிப்பின் அடையாளம், விழுந்து போன பற்களின் இடைவெளியினூடாக என்னைத் தொட்டது.- காந்தம் போல, இடைக்காலப் புதினங்களை அறிந்து கொள்ளும் ஆவல் எனக்கு எழவில்லை. அவனின் விரல்கள் என்னை நோக்கி நீண்டிருந்தன. மரத்துப் போன விரல் மடிப்புகள், தோல் சுருக்கங்கள் வயதுக்கு மீறிய முதுமையைக் அவனில் காட்டின.

அவனின் தமிழ், ஆங்கிலப் புலமை, பேரறிவு எல்லாவற்றையுமே எங்கோ குழி தோண்டிப் புதைத்துவிட்டு வெறுங்கையோடு வந்திருக்கிறேன் பார் என்பது போலிருந்தது.

அவனருகே சென்று அழைத்து வந்து கதிரையில் அமரச் செய்தேன். புன்சிரிப்பு மட்டுமே எல்லாவற்றுக்கும் அவனுடைய பதிலாக இருந்தது. எனது மகனின் தலையை தடவி விட்டுச் சிரித்தான். 'இன்று எங்கள் வீட்டில் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேணும்.' எனக் கேட்ட போது அவனின் நரைத்தாடி மகிழ்ச்சியோடு அசைந்தது.சாப்பாடு முடிந்து நீண்ட நேரமாக அவனருகில் அமர்ந்து பேசினேன். அவனின் புன்சிரிப்பு நான் பேசுவதைக் கேட்கின்றானா இல்லையா என்பதை இனம் காட்ட வில்லை. பேச்சை நிறுத்திக் கொண்டேன். சேற்றிலிக்கும் என்னைக் கை கொடுத்துத் தூக்கிவிடும் வேலை தனக்குரியதல்ல என அவன் நினைத்திருக்கலாம். அவனின் கரங்களைத் தீண்ட முடியாத தூர இடைவெளியில் என் கரங்கள் இருப்பதால் என்ன ஈடேற்றம் கிடைக்கப் போகிறது என அவன் எண்ணியிருக்கலாம்.

அவன் விடை பெறும் போது "எல்லாம் வெற்றி" எனக் கூறிச் சென்றான்.

நாட்டை இராகத்தில் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே- பொய்மையே பெருக்கி" அவனின் இளமைக் காலக் குரல் இப்பொழுது உயிர்பெற்று என்னைத் தழுவியது.

பொய்மையே பெருக்கும் மனிதர்களில் ஒருவனான எனக்குத் தான் 'எல்லாம் வெற்றி' என்று கூறிவிட்டுச் சென்றானா? அதன் பின், அவனின் நினைவுகள் அடிமனம் வரை பாய என் உறக்கம் கெட்டது.

அவன் அடிக்கடி சொல்வான்.

'திறமையான மாணவனுக்கே ஆசிரியர் கடுமையான கணக்குகளைக் கொடுப்பார் என்று' அவன் கடுமையான கணக்குகளையே வாழ்க்கை பூராகச் செய்து கொண்டிருந்தான். அவற்றுக்கான மதிப்பீடுகளை வழங்குவது எவர் கையில் உள்ள அளவு கோலினால் என்பது தான் அவன் எனக்கு விட்டுச் சென்ற கேள்வியாகும்.

உலகம் தோற்றங் கொண்ட நாட்களிலிருந்து மனக்குகைகள் பிளந்து மானுடம் வளரும் எனப் போதித்து வந்த ஞானவெளிப் பயணங்களைக் கடந்து எனது நண்பன் எவ்வளவு தூரம் இப்போது போயிருப்பான்?

அவனின் தகனக் கிரியைகள் அரச செலவில் ஒரு நாள் வன்னிப்பகுதியில் எங்கோ நடந்ததாக அறிந்தேன். அவனிலிருந்த திண்ம, திரவப் பொருட்கள் தீயில் நீறாகிப் போயிருக்கும். ஆனால் அவன்?

ஒரு 'பனியனின்' முடிவாக உலகம் அவனைப் பதிவு செய்து கொள்ளும்.





# நிலாவெளுப்பு

த. ஜெயசீலன்

நீண்ட இரயிற்பயணம்
நித்திரையில்லாத நிசி
காற்று....சிறுகுழந்தைக் கையால் எனைக்குடைய
ஜன்னலோரம்......எனக்குச்
சாமரமாய் மாறிற்று
இரயில் வேகத் தாலாட்டில் இரசித்தேன் நான்
விண் நிலவை!
முகில் மறைக்க...,
மோதி எனக்கு முகங்காட்டி,
பிரயத்தனப் பட்டு அது என்னோடு பேசிற்று
நீண்ட இரயிற்பயணம்;
நித்திரையில்லாத நிசி;
ஆனாலோர் நொடியில் அனைத்தும் மறந்தென்னைத்
தூக்கம் விழுங்கத் தொலைந்து போனேன்.
கண்விழித்த
போது;
இரயில் நானும் போய்ச்சேரும் ஊர் எல்லை
ஓரத்தில் நின்றிற்று!
உயரே அதே நிலவும்
ஓடி வந்த களைப்போடு வியர்த்தென்னை
நோக்கிற்று
எத்தனை மணிநேரம் நித்திரையுள்
நானிருக்க
சற்றுஞ் சளைக்காமல் எனைத்தொடர்ந்த
'சகநிலவின்'
பாச வெள்ளை ஒளிச்சிகப்பு
எனை வெளுத்துப் போட்டிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மரணங்களும்



வஜ்ஜா.நடராஜா



# உணர்வுகளும்

வீட்டின் நடுஹோலில் நவநீதனின் பிரேதம் வாங்கு ஒன்றில் வளர்த்தப்பட்டு வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருக்கிறது. தலைமாட்டில் இருந்து பெரியதொரு செம்புகுத்து விளக்கு எரிந்து கொண்டிருக்க சாம்பிராணிப் புகையும் எழுகின்றது.

ஹோலில் விரிக்கப்பட்டிருந்த பாய்களில் பெண்கள் நான்கு ஐந்து என்ற அளவில் கூடிக் கூடிக் தமக்குள் ஏதோ குசுகுசுத்த வண்ணமிருக்கின்றனர். அவர்களின் நெற்றியில் பொட்டு இல்லை. செத்த வீட்டுக்கு வரும் பெண்கள் பொட்டு வைப்பது இல்லைத் தானே. ஆனால் அவர்களின் முகத்தில் துயரத்தின் நிழலும் இல்லை. ஏன் அங்கு அழுகை ஒலியையோ, விசும்பலையோ கேட்க முடியவில்லை. அங்கிருந்தவர்களிடையே ஏதோ வாதப் பிரதிவாதம் நடைபெறுவது போல் தோன்றுகின்றது. நான் ஒன்றிலும் பட்டும் படாமலும் ஏதோ சிந்தனையில் பெண்கள் பகுதியில் அமர்ந்திருக்கின்றேன்.





நவநீதனின் தாயும் தலைமாட்டுப் பக்கமாக விரிக்கட்டிருந்த பாயில் அமர்ந்திருக்கிறாள். அவளின் நெற்றியிலும் பொட்டு இல்லை. ஆனால் அவளின் முகத்திலும் துயரத்தின் நிழலைக் கண்டு பிடிப்பது சற்று சிரமமாக இருக்கிறது. மற்றவர்களுக்கு ..........பரவாயில்லை. அவளுக்கு இருக்கவேண்டுமே. பத்து மாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி வளர்த்தவளலல்லவா தாய். ஏன் பேதம் பார்க்காமல் பிள்ளைகளை வளர்ப்பவள் அல்லவா தாய். தன் பிள்ளைக்கு சிறு துன்பம் என்றால் துடியாய் துடிப்பவளல்லவா தாய். பிள்ளைகளின் தராதரம் பார்க்காமல் நேசிப்பவள் தாய்தான். அவள் கூட இளவயதான தன் மகன் மீளாத்துயில் கொண்டு விட்ட போதும் வைராக்கியமாக இருக்கிறாளே. உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதுதான் இப்பொழுது நாகரிகமோ என எண்ணிய எனக்கு ஏதோ மனதில் இடிக்கிறது.

முற்றத்தில் தகரக் கொட்டகை போடப்பட்டிருக்கிறது. கொட்டகைக்குள் வாடகைக்கு எடுக்கப்பட்ட கதிரைகள் ஒழுங்காக போடப்பட்டிருக்கின்றன. நவநீதனின் அப்பா நின்ற வண்ணம் யாருடனோ கதைத்துக் கொண்டிருக்கிறார். ஏதோ ஒரு விஷயத்தை ஆமோதிப்பது போல் இடைக்கிடை தலையும் ஆட்டுகின்றார். மற்றைய நபர் என்ன கூறுகிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. என்னால் வாயசைவைத்தான் கவனிக்க முடிகிறது.

நான் பெண்கள் பகுதியில் இருந்துவிட்டுச் சற்று முன்னர் தான் முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்த வண்ணம் நவநீதனின் தகப்பனை அவதானித்துக்கொண்டிருக்கின்றேன். நான் எனது நண்பர் ஒருவருடன் கதைப்பதற்காக இங்கு அமர்ந்திருக்கின்றேன். அவர் என்னை இருக்கும் படி கூறி விட்டு ஏதோ அலுவலாக தெருவுக்குச் சென்றுள்ளார்.

நான் நவநீதனின் அப்பாவைக் கவனிக்கிறேன். அவர் நின்ற படியே முன்னர் கதைத்து கொண்டிருந்தவருடன் தான் இப்பொழுது கதைத்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது இன்னுமொருவர் வருகிறார். அவர் நவநீதனின் அப்பாவின் அருகில் சென்று அவர் முதுகை ஆதரவாக வருடுகிறார். நவநீதனின் அப்பா அவர் கைகளைப் பற்றி அவரை ஹோலுக்குக் கூட்டிச் செல்கிறார்.

நான் எனது பிரச்சினையில் மூழ்குகிறேன். "இப்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு எப்படிக் கதைக்கிறது, பேசுகிறது என்று தெரியாது. என்ரை பிள்ளை அதுவும் விடியக் காலையிலை என்னகதை கதைச்சுப் போட்டான். " எனது மனம் அல்லலுறுகிறது.

" உங்களுக்கு என்னிலை விருப்பமில்லை. அதோட அக்கறையுமில்லை." என் மகன் கூறினான். " டேய் எனக்கு எப்படியடா அக்கறையில்லாமல் போகும். பாசம் இல்லாமல் போகும். அம்மாவைப் பார்த்து இப்படிக் கதைக்கிறாயே? அம்மாவுக்கு எப்படி இருக்குமடா? நீ மட்டும் இரண்டாவது தடவை பரீட்சையை எடுத்து பார்த்திட்டு உன் விருப்பப்படி செய்.

" ஓ வாயாலை சொல்லலாம் தானே? " என்றான். "என்னடா நான் உனக்குச் செய்தனான். சரி பிழைக்கு அம்மா கண்டிக்கக் கூடாதோ? சரி, சரி வந்து சாப்பிடு " நான் என் மகனை அழைத்து சாப்பாடு கொடுக்கிறேன்.

எனக்கும் என் மகனுக்கும் உள்ள பிரச்சினை, பரீட்சை விஷயமானது. அவன் உயர்தரப் பரீட்சை இரண்டாவது தடவையாக தன்னால் எடுக்க முடியாது. கொழும்பு சென்று ஏதாவது கோர்ஸ் படிக்கப் போகின்றேன் என்று நிற்கிறான். நானோ இரண்டாவது தடவையும் எடுத்துப் பார்க்கும் படி அவனை கெஞ்சுகிறேன்.

"நான் செத்துப் போனால் பிரச்சினை இல்லை. நீங்களும் உங்கள் பாட்டில் ............. உங்களுக்கு அண்ணாவிலை தான் விருப்பம். அவனுக்கு ஏதுமென்றால் ......... " சாப்பிட்டுக் கொண்டிருந்த என் மகன் கூறிய போது எனக்கென்ன மாதிரி இருந்திருக்கும். எனது மகனிலை ஒரு குணம், சிறு சிறு பிரச்சனைகளுக்கு எல்லாம் " உங்களுக்கு அண்ணாவிலை தான் அக்கறை என்று நெஞ்சில் தைக்கும்படி கூறுவது. இது எனது மனதை உறுத்தத் தவறுவதில்லை.

" ஏண்டா அப்படிச் சொல்லுறாய். வாழ வேண்டிய வயது இப்படியா கதைப்பது.........டேய் தாய் தகப்பனுக்கு எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதான் " நான் கூறினேன். அப்பொழுது எனது மனம் பட்டபாடு. பெற்ற வயிறு துடித்தது. எனது மகன் சாப்பிட்டு விட்டு போய் விட்டான். அவன் போன கையுடன் நவநீதன் மரணமான செய்தியை அறிந்து கொண்டேன். செய்தி அறிந்த கையுடன் வந்து விட்டேன். எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவநீதனின் தாய் தகப்பனுடன் இறுக்கமான நட்பு. நவநீதனின் அப்பா நான் படிப்பிக்கும் பாடசாலையில் தான் படிப்பிக்கிறார். தொழில் மூலமாக அறிமுகமாகி நாங்களும் எங்கள் குடும்பங்களும் நெருங்கி விட்டன.

என் மனதுக்கு எனது மகன் கூறியது பாரமாக இருந்தது. அவன் கூறிய வார்த்தைகள் என் மனதை அழுத்திய வண்ணம் இருந்தது.

இப்பொழுது நான் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேனோ அவர்,

" என்ன ரீச்சர் உங்களுக்கு மாஸ்டர் எப்படிப் பழக்கம்? " அவர் உரையாடலை ஆரம்பிக்கிறார்.

"நான் படிப்பிக்கும் பாடசாலையில் தான் படிப்பிக்கிறார்." நான் பதில் கூறுகிறேன்.

" மாஸ்டருடைய மூத்த மகன் செத்தது கிட்டடியிலை...... " தொடங்கி அவர் முடிப்பதற் கிடையில் குறுக்கிட்டு. அவரை யாரோ ஒருவர் வந்து " உங்களை வரட்டாம்" என்று அழைத்துப் போகிறார்.

எனக்கு இப்பொழுது தான் மாஸ்டருடைய மூத்த மகனை நினைக்க முடிந்தது. அவன் தவசீலன் செத்து இரண்டு வருடம் தான் ஆகிறது. எனக்கு இது ஏன் நினைவில் மறைஞ்சு போச்சு. ஓ இண்டைக்கு எனது மனதுக்கு கோளாறு. என்னுடைய நினைவோட்டம் சீராக இல்லாமல் தடைப்பட்டு தடைப்பட்டு....... எல்லோருக்கும் ஏதோ ஒரு சமயத்தில் ஞாபகம் வர வேண்டியதுகள் நினைவில் அழிந்து, ஆமாம் அவர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள்.

என்னை இப்பொழுது தவசீலனின் நினைவு ஆட்டிப் படைக்கத் தொடங்குகிறது. நவநீதனும் செத்துவிட்டான். தவசீலனும் போய்விட்டான். தவசீலனை நினைக்க என் நெஞ்சில் அழுத்தம் சற்று அதிகம் போல் ஆழ்மனதால் உணரப்படுகிறது. ஏன் அத்தனை அதிக அழுத்தம் என் அதனை நினைவு மனத்திற்கு கொண்டு வந்து நான் ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. அதனை ஒதுக்கி விட்டு விட்டேன்.

தவசீலனை இரண்டு வருஷத்திற்கு முன்னர் தான்

ஆமிக்காரர்கள் சுட்டு சாக்காட்டினவங்கள். தவசீலன் கம்பசில் படித்துக் கொண்டிருந்தவன். துடிதுடிப்பானவன். எல்லோரையும் தன் பேச்சால் கவர்ந்து விடுவான். என் மகன் போல தாயுடன் அடிக்கடி சண்டை போடுவான். " முன்கோபி " என்று அவனின் தாய் செல்லமாக அவனை கடிந்து கூறுவாள். ஏன் மாஸ்ரரும் தான்.

எனக்கு தவசீலனை நினைக்க நினைக்க நெஞ்சின் பாரம் அதிகரிக்கிறது. " அன்ரி அன்ரி " என்று வளைய வந்து என்னமாதிரி என்னுடன் பகிடி விடுவான். நான் அவன் விடும் பகிடிகளை எவ்வளவு தூரம் ரசித்திருக்கிறேன். " சீலனுக்கு கோபம் வந்தாலும் பிறகு அம்மா அம்மா என்று எனக்கு பின்னால் திரிந்து என்னை சமாதானமாக்கி விடுவான்" தாய்க்கே உரிய வாஞ்சையுடன் சீலனைப் பற்றி அவனின் தாய் அடிக்கடி என்னிடம் கூறுவாள்.

தவசீலன் இளவயதில் செத்துவிட்டான் என்று அறிந்து அதிர்ச்சியும் பதைபதைப்பும் அடையாதவர்கள் யார்?. தவசீலனின் செத்தவீட்டிற்கு வந்தவர்களில் யார் தான் அழாமல் இருந்தவர்கள். அப்படி செத்த வீட்டுக்கு வந்தவர்களின் கண்கள் கசியும் படியாக தவசீலனின் அம்மாவும் அப்பாவும் கத்தின கத்தல். இப்போது இருப்பது போலவா இருந்தார்கள். மாஸ்ரரும் அக்காவும் அறிந்தவர், தெரிந்தவர், உறவினர் என ஒவ்வொருவராக வரவர அவர்களை கட்டிப்பிடித்து கத்தின கத்தல் இருக்கிறதே........... என்னைக் கண்டு தவசீலனின் அப்பா " ரீச்சர் என்ர சந்தோஷம் போட்டுது. இனி எனக்கென்ன வாழ்க்கை." என்று பெரும் குரலெடுத்து அழ சீலனின் அம்மா " ஐயோ அக்கா என்ர பிள்ளையை பாருங்கோ, எப்படி படுத்திருக்கிறான். இப்படிக் காணவே நான் கனவு கண்டனான். என்ர கனவுகளை எல்லாம் இவனிலை தானே வளர்த்தனான். என்னை இனி ஏன் அந்த ஆண்டவன் விட்டு வைத்திருக்கிறான். ஐயோ என்னையும் கொண்டு போ" தன் மார்பில் இரு கைகளாலும் அடித்து அழ நானும் அவவுடன் சேர்ந்து அழ எல்லோர் கண்களும் கசிய ........ அப்பப்பா" எண்ணிய நான் சீலனின் செத்த வீட்டை நினைத்து இப்பவும் கசிந்த கண்களை துடைத்துக் கொள்கிறேன்.

இப்பொழுது நான் மாஸ்டரை கவனிக்கின்றேன். அவர் அமைதியாக அலுவல்களை கவனித்துக் கொண்டிருக்கிறார். எனக்கு சீலனின் செத்தவீட்டின் போது மாஸ்ரர் தான் ஓர் ஆண் மகன் என்பதையும் மறந்து சீலனின் பிரேதம் எடுக்கும் போது நிலத்தில் புரண்டு அழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழுகை தான் ஞாபகத்திற்கு வருகிறது. அன்று அந்தக் காட்சியைக் கண்டு விக்கி விக்கி அழாதவர்கள் யார்? ஆனால் இன்று எல்லோரும் மௌனித்துப் போய் இருக்கிறார்களே, நானும்.

நான் இப்பொழுது எழுந்து சென்று பெண்கள் பகுதியில் நவநீதனின் அம்மாவின் அருகில் அமர்கிறேன். நவநீதனின் அம்மாவின் அருகில் இன்னும் சில பெண்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் எனக்கு அறிமுகமானவர்களே. பெண்களில் ஒருவர் நவநீதனின் அம்மாவுக்கு ஆறுதல் சொல்கிறார். " பெரிசாய் கவலைப் படாதையுங்கோ, இத்தனை நாள் வளர்த்தது கவலை இருக்கும் தான். இல்லை என்று சொல்லவில்லை. நவநீதன் எப்பொழுதும், கடைசிக் காலத்திலையும் உங்கள் இரண்டு பேருக்கும் பாரம் தானே. உங்களுக்கு பிறகு நவநீதன் இருந்தால் யார் பார்க்கிறது. சீலன் இருந்தால் கவலையில்லை. பார்த்துக் கொள்ளுவான். அவனும் போட்டான்.

" ஓமோம் நான் நவநீதனின் ஆத்மா சாந்தியடையத்தான் பிரார்த்திக்கிறேன். " கூறியவர் என் கைகளைப் பற்றிக் கொண்டு " அக்கா சீலனை நினைக்க தான் எனக்கு...... அவனைத் தானே நாங்கள் நம்பி வாழ்ந்தம்........" விம்முகிறார். இரு வருடத்திற்கு முன் இறந்து விட்ட தவசீலனை நினைத்து.

எனக்கு ஆழ்மனதில் கிடந்து உறுத்தியது நினைவு வருகிறது. நவநீதன் மனவளர்ச்சி குன்றிய இருபத்தொரு வயது குழந்தை என்பது. " ஓ நவநீதனைக் கடைசியிலை யார் பார்ப்பது? ஆனால் சீலன் தான், வாழ வேண்டிய வயதில் வீணாய்" எண்ணிய என் மனம் கேள்வி ஒன்றை இடித்து என்னிடம் வினவுகிறது. இப்பொழுது இரு மரணங்களும் எனக்கு எவ்வளவோ செய்தியை சொல்லிச் சென்றன. எனக்கு மனது ஒரு மாதிரியாய் போய்விட்டது.

# சூரியன்



(1)

உலக வாழ்வின் உயிர்மூச்சாம் தீயே
உனை வணங்கித் துதிக்கின்றேன்;
உலக நிலையின் முதலும் - முடிவுமாய்
அதன் வாழ்வும் வளமுமாய்
உன்னையே நீ அர்ப்பணித்திருக்கின்றாய்:
உலகின் கருத்தாவும் நீயே;
அதன் முதற்கருவியும் நீயே.
நீயின்றி உலகம் இல்லை.

(2)

உலகமின்றி நானில்லை; - நான்
ஒரு சுயநலக் காரன்தான்;
உலகம் முழுவதுமே சுயநல
மயக்கில் ஆழ்ந்திருக்கின்றது.
நான் ஏன் அதற்கு
விதிவிலக்காய் இருக்க வேண்டும்?
சுயநலப் போக்கிலேயே நானுன்னை
வணங்குகின்றேன்; எனக்கு நன்மை
அளித்தாய் ; அளிக்க வேண்டும்.
என்றே நானுன்னை வணங்குகின்றேன்.

(3)

நீ தியாகி; சுயநலக்கார மனிதப்
புழுக்களுக்கு உன்தியாகம் தெரியாது.
உன் எண்ணக்கருவில் இருந்து
பிறந்த உலகிற்கு நீயே உருவமாய்
உயிராய், உள்ளமாய் மாறி
உன்னையே அர்ப்பணித்திருக்கின்றாய்;
உன்னை நான் வணங்குகின்றேன்.

(4)

வானத்தில் தேவனாய் பவனிவரும்நீ
எத்தனையெத்தனை சாகசங்கள் செய்கின்றாய்;
நீ எட்ட முடியாத உயரத்திலே இருக்கின்றாய்;
எல்லாவிதத்திலும் நீ எட்ட முடியாதவன்தான்;
நீ பகல், இரவு என்ற இச்சகட
வாழ்வின் அளவுகோலாய்
கண அசைப்பின் பகுதிகளாய் - வினாடி,
நிமிடம், மணி, பகல், இரவு, வாரம்,





வருடம், கோடை மாரி
வசந்தம் இலையுதிர் என்ற
சுழல் சக்கரங்களாய்............... உன்னால்
எத்தனையெத்தனை உருவங்கள் எடுக்கமுடியும்?
உன்னை நான் வணங்குகின்றேன்!

(5)

நீ ஒளியைத் தருகின்றாய் - ஒளியைத்
தராதபோது இருளையும் உணர்த்துகின்றாய்;
ஒன்றுமாய் அதன் எதிருமாய்
நீயே இயங்குகின்றாய்.
நீ அளவற்ற சக்தி படைத்தவன்;
ஒளியிலும் இருட்டிலும் உலகில்
எத்தனையெத்தனை நிகழ்ச்சிகள் நடக்கின்றன;
வாழ்வென்ற அந்த விளங்கமுடியாத
செயல் அப்போதுதான் நடக்கின்றதா....?
ஒளியும் - இருட்டும், குளிரும் - சூடும்
பகலும் - இரவும், கோடையும் - மாரியும்
எதிருக்கெதிராய் இணைக்கிணையாய்
புரியவைத்திருக்கிறாய் நீ.
இவற்றின் போக்கின் சுழற்சிளுக்கேற்ப
மனிதன் ஆடும் ஆடல்கள் தான் வாழ்வா........?
வாழ்வென்பதை என்னால் விளங்கமுடியவில்லை.
இருட்டிலும் ஒளியிலும் நடக்கும்
அந்தக்கூத்துகள்தான்
வாழ்வென்பதை என்னால் நம்பமுடியவில்லை.
வாழ்வைப் புரியவைக்க உன்னால் முடியுமா...?
உன்னை நான் வணங்குகின்றேன்:
உன்னால்தான் மழை பொழிகின்றது;
உன்னால்தான் வெப்பம் கிடைக்கின்றது;
உன்னால்தான் பயிர்கள் வளர்கின்றன;
உன்னால்தான் உயிர்கள் வாழ்கின்றன;
உன்னால்தான் நிலவு எறிக்கின்றது;
உன்னால்தான் தென்றல் தவழ்கின்றது;
உன்னால்தான் மணம் பரவுகின்றது;
உன்னால் தான் மாலை வருகின்றது;
உன்னால்தான் காதல் பிறக்கின்றது;
காதலால் உலகமே இயங்குகின்றது.
நான் உன்னை வணங்குகின்றேன்;
உன்னைப் போற்றிப் புகழ்கின்றேன்;
உன் புகழ் பாடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் இழப்புகளால் தத்தளிக்கும் ஈழத்து தமிழ் இலக்கியக் களம்!

அஞ்சலிக்குறிப்பு – சி.திருச்செந்தூரன்

*தமிழ் கூறும் நல்லுலகம் கடந்த இரண்டு மாதங்களுள் ஈழத்து தமிழ் இலக்கியச் சோலையிலே பல ஆல விருட்சங்களை இழந்து நிரப்பப்பட முடியாத வெற்றிடமாக பரிதவித்து நிற்கிறது. இவர்களை அழைத்துச் சென்ற சாவே உனக்கொருநாள் சாவு வந்து தீராதோ? இவர்களை அழித்துச் சென்ற தீயே உனக்கொருநாள் தீமூட்டிப்பாரோமோ? எது நடக்கக் கூடாதோ அது நடந்து விட்டது. எங்கள் இலக்கிய வானில் சில நட்சத்திரங்கள் மறைந்து விட்டன. எங்கள் நந்தவனத்தில் சில பூமரங்களே உதிர்ந்துவிட்டன. எங்கள் கலைத்தோப்பில் கூவும் குயில்கள் சில மரித்துவிட்டன. காலன் இவர்களை கவர்ந்தே விட்டான். இவர்களுடைய மரணம் இலக்கிய உலகிற்கு என்றுமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.*

## புலோலியூர் க. சதாசிவம்

★ "ஞானம்" மாசிகையின் இணை ஆசிரியர்.

★ விருதுகள்:- இந்து சமய தமிழ் அலுவல்கள் அமைச்சு - " இலக்கிய வித்தககர்" ஊவாமாகாண இந்து கலாசார அமைச்சு "இலக்கியச் செம்மல்"

★ மரகதம் என்ற மாசிகையின் ஆதரவில் இலக்கிய இரசிகர் குழு நடாத்திய சிறுகதைப் போட்டியில் " புதுவாழ்வு" என்ற முதற்கதையை எழுதி பலரதும் பாரட்டைப் பெற்றதன் மூலம் ஈழத்து உலகில் கவனிப்புக்குரியவரானார்.

★ இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியாக "யுகப் பிரவேசம்" 1973 இல் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து முறையே "ஒரு நாட் போர்", " ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது", "புதிய பரிமாணம்" போன்ற சிறுகதைத் தொகுதிகளைத் தந்துள்ளார்.

★ இவரது சிறுகதைகளிலே " அக்கா ஏன் அழுகிறாள், சந்தனக் கட்டை, புதிய பரிமாணம் போன்றவை சிறப்பிற்குரியவை.

★ இவர் "நாணயம் " என்ற நாவலை 1980 இலும் "மூட்டத்திலுனுள்ளே" என்ற நாவலை 1983 இலும் எமக்களித்து நாவல் உலகிலும் தனக்கென தனியான தடம்பதித்துச் சென்றுள்ளார்.

## ஏ.பி.வி.கோமஸ்

★ 1932 இல் பிறந்த மூத்த எழுத்தாளரான ஏ.பி.வி.கோமஸ் 1954 ம் ஆண்டிலிருந்து சிறுகதை, குறுநாவல், நாட்டாரியல், கவிதை, சமயம், கல்வி ஆகிய பல்துறைகளிலும் தமது திறமைகளை வெளியிட்டவர். இதன் மூலம் 150 ற்கு மேற்பட்ட சிறுகதைகள். 400 ற்கு மேற்பட்ட கவிதைகள், நூற்றுக்கணக்கான கட்டுரைகளைப் படைத்துள்ளார்.





★ இந்து கலாசார அமைச்சு " தமிழ்மணி " என்ற பட்டத்தையும் தினகரன் வாரமஞ்சரி இலக்கிய உலகம் "பல்கலைச் செல்வர் " என்ற பட்டத்தையும் வழங்கி தம்மைக் கௌரவப் படுத்திக் கொண்டன.

★ இவரது பன்னிரண்டு சிறுகதைகள் "வாழ்க்கைப் புதிர் " என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது.

★ மலையக நாட்டார் பாடல்களை மையமாகக் கொண்டு "அங்கமெல்லாம் நிறைஞ்ச மச்சான் " என்ற நாவலை எழுதியுள்ளார்.

★ இவர் தனது கவிதைகளை சொந்தப் பெயரில் மாத்திரமல்லாது "ஜெயம்" என்ற புனைபெயரிலும் யாத்துள்ளார்.

★ கத்தோலிக்கராக இருந்த போதும் சிறந்த சைவச் சொற்பொழிவாளராக; இஸ்லாமியப் பாடல்கள் பல பாடிய பாடலாசிரியராக இருந்து மதங்களின் இணைப்புப் பாலமாக திகழ்ந்துள்ளார்.

## மருதூர்க்கனி

★ நாடறிந்த கவிஞர், அரசியல் வாதி.

★ இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகளிலும் இவரது கவிதைகளும், சிறுகதைகளும் பாராட்டுப்பெற்றன.

★ ஐக்கிய தேசியக் கட்சி' கலாபூசணம்' விருதையும், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்கா "லங்காதிலக" என்ற பட்டத்தையும் வழங்கி இவரை கௌரவித்துக் கொண்டார்கள்.

★ இவர் நோயிற்றிருந்த காலப்பகுதியில் எழுதிய "அந்த மழை நாளுக்காக" "மண் பூனைகளும் எலி பிடிக்கும்" என்ற இரு கவிதைத் தொகுப்புகளும் பிரபல்யமானவை. இதில் பின்னையது 2003ம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

★ இவர் ஒரு சிறந்த இலக்கிய விமர்சகரும் அரசியல் விமர்சகரும் ஆவார்.

## தில்லைச் சிவன்

★ "வெல்லச் சுவையினையும் வெல்லக்கவி செய்யும் தில்லைச் சிவன்" என சில்லையூர் செல்வராசனால் சிறப்பிக்கப்பட்டவர்.

★ இவர் கவிஞனாக மட்டுமன்றி சிறுகதை ஆசிரியனாக; கட்டுரையாளனாக பல்வேறு வகைகளில் காத்திரமான தமிழ்ப் பணிகள் புரிந்துள்ளார்.

★ இவருடைய " காவல் வேலி " என்ற சிறுகதைத் தொகுப்பும் தந்தை செல்வா பற்றிய காவியமும் அண்மையில் வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## புத்தொளி . ந. சிவபாதம்

★ மூத்த எழுத்தாளர் " புத்தொளி" ந. சிவபாதம். கல்விச் சேவையில் ஆசிரியராய், அதிபராய் மிளிர்ந்தவர்.

★ சுதந்திரன், வீரகேசரி, சிந்தாமணி உட்பட பல ஈழத்துப் பத்திரிகைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, கவிதை, கட்டுரை என்று நிறையவே எழுதி பல்துறைகளிலும் கால்பதித்தவர்.

- ★ சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கிய புத்தொளி பதினெட்டு நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.
- ★ ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் விபரங்களை தொகுத்து நூல் ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் காலன் அவரை முந்திவிட்டான்.
- ★ ஈழத்து பல நூறு நூல்களையும் அரிய பல நூல்களையும் தமது வீட்டு நூலகத்தில் சேகரித்து வைத்து தகவல் பொக்கிசமாய் திகழ்ந்தவர்.

## கே.வி.நடராஜன்

- ★ ஈழத்தின் மூத்த படைப்பாளியும் முற்போக்கு சிந்தனையாளரும் கே.வி.நடராஜன் ஆவார்.
- ★ இவரது "யாழ்ப்பாணக் கதைகள் " என்ற நூல் யாழ் இலக்கிய வட்டத்தால் தமது முதலாவது வெளியீடாக வெளியீடு செய்யப்பட்டது.
- ★ அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் யதார்த்த வாழ்வை களமாய்க் கொண்டு அவர்களின் விடிவிற்காக பல சிறுகதைகளை மண்வாசனை மணங்கமழ படைத்தளித்தார்.
- ★ இவரின் இருபத்திரண்டு சிறுகதைகளின் தொகுப்பாக "வேலி" தமிழகத்தில் சில வருடங்களுக்கு முன் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.
- ★ இவர் தனது முதுமைக் காலத்திலும் வறுமை வாட்டிய போதும் கூட இலக்கியப் பணிகளை செய்வதில் அயராது முன்நின்று உழைத்தவர்.

## சொக்கன்

- ★ விருதுகள் :- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "இலக்கிய கலாநிதி", பாலகதிர்காமம் தேவஸ்தானம் "குகஸ்ரீ", அகில இலங்கை கம்பன் "மூதறிஞர்", ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை "தமிழ்மாமணி", இந்து கலாச்சார அமைச்சு "இலக்கியச் செம்மல்".
- ★ இவர் தன்னை மறைத்து தமிழ் உலகிற்கு சொக்கன்,ஆராவமுதன்,அடியவன்,வேனிலான், தேனீ,சுடலையூர்ச் சுந்தரன், பொய்யாமொழியார், சோனா, திரிபுராந்தகன், ஈழசேனன், வீரசிங்கன், பழையவன், பாலன், எதார்த்தன், சட்டம்பியார், சாம்பவன், ஜனனி, குறளன், ஈழத்துப்பேய்ச் சாத்தான், ஞானம், கன்றுக்குட்டி என்ற புனைபெயர்களில் காட்சி அளித்தார்.
- ★ சொக்கன் அவர்கள் தனது பதின்நான்காவது வயதிலேயே (1944) சிறுகதை ஊடாக எழுத்துலகில் காலடி வைத்து கம்பீர நடை நடந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதி எழுத்துலக ஜாம்பவனாக திகழ்ந்தவர். அவருடைய சிறுகதைத் தொகுதியான "கடல்" 1972 ம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. இவர் எழுதிய சிறுகதைகளுள் "குட்டைநாய், மாணிக்கம், கடைசி ஆசை, வினோத நண்பன், கடல் போன்றவை அற்புதமானவை! சிறப்பிற்குரியவை.





- ★ சொக்கன் அவர்கள் 'வீரத்தாய்', 'நசிகேதன்', நல்லூர் நான்மணிமாலை', 'நெடும்பா', போன்றவற்றை கவிதை நூல்களாய் யாத்துள்ளார்.
- ★ நாவலிலக்கிய உலகிலும் சொக்கன் அவர்கள் தனக்கென தனித்துவமான தடம் பதித்துச் சென்றுள்ளார். "சீதா", சலதி, "செல்லும் வழி இருட்டு" ஆகிய நாவல்களையும் "மலர்ப்பலி', 'ஞானக்கவிஞர்", முகங்கள் போன்ற குறு நாவல்களையும் தந்துள்ளார்.
- ★ சொக்கன் அவர்கள் வரலாற்றுடன் தொடர்புடையதாய் "சிலம்பு பிறந்தது" என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இவ் நாடகமானது அவரது நாடக புலமையின் ஆழ அகலங்களை தெளிவாக காட்டுகின்றது. இவைகளுடன் அமையாது கட்டுரைக் கோவைகளின் படைப்பாளனாக; பாடநூல் எழுத்தாளனாக சிறந்த மேடைப் பேச்சாளனாக இன்னோரன்ன பல்வேறு வகைகளில் நின்று காலத்தால் அழியாத தமிழ்ப்பணி புரிந்துள்ளார்.

## வாசகர் கடிதம்

வணக்கம்!

தங்களின் 'புதியதரிசனம்' இதழ் பார்த்தேன். ஏனைய மூன்று இதழ்களை விட இவ்விதழ் நேர்த்தி. கவிதைகளில் உயிர்ப்பில்லை. சிறுகதை "மூடு பெட்டி" யில் வீடு பாவனை வீடாக காட்டப்படுகிறது. சிலந்தி இல்லை, கறையான் இல்லை. வினோ வருவாள் என்றும் சொல்லப்படுகிறது. பின் பிரேதமிருப்பதாகவும் அதை மறைப்பதற்கு ஏதோ அச்சத்தில், அடுக்கியிருந்த புத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொண்டு பிரேதத்தை மூடி ஊதுவர்த்தி கொழுத்தல் ஆனது பாளடைந்த அல்லது இழந்த வீடுவாக சித்தரிக்கப்படுகிறது. 'இந்திரனின்' நூதனச் சிறுகதைகளிலும் தெளிவிருக்கிறது. மனதில் எழுந்த விடயங்கள் எல்லாம் சிறுகதைகள் அல்ல, மையம் நோக்கிய குவிவுமல்ல சிறுகதை.

தாட்சாயணியின் 'ஒரு உறவின் வெட்டு முகம்' கதையிலும் 'முடக்கு' எனும் இடம், ஆட்கள் நடமாடும் இடம், (நடமாடாதஇடம் என காட்டப்படவில்லை) தெருக்கருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, மிக அருகுப் பற்றையில் சிறுமி மீது பாலியல் வன்புணர்வில் ஒரு வன் ஈடுபடுவதாகச் சொல்லப்படுகிறது. யதார்த்தமா? சில வேளை அந்த இளைஞன் புத்திசுயாதீனமற்றவன் எனச் சொல்லியிருந்தால் சாத்தியமாகும். "போடா வெளியில்" எனும் வார்த்தைகளை வைத்துக் கொண்டு செய்யப்பட்ட கதைபோல் தெரிகிறது. சிறுகதை என்பது புரிவதல்ல, விளக்குவது. இந்தப் பலவீனம் தாட்சாயணி, ராகவன் போன்றவர்களின் கதைகளில் பொதுவாகத் தெரியும் ஒன்று

அடுத்து ராகவன் 'எதிர்ப்பிலக்கியம் ஒரு கலாச்சார ஆயுதம்" என்ற நூல் விமர்சனத்தில் எதிர்ப்பிலக்கிய போலி எழுத்தாளர்கள் என ச.முருகானந்தன், வளவை வளவன், யோ.கர்ணன் என்பவர்களை குறிப்பிடுகிறார். ராகவன் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் வாழ்பவர் அப்படிப்பட்டவருக்கு, விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்பவர்கள், படைப்பாளிகள், படைப்புக்கள் பற்றிய முழுமைகள் தெரியாதவர். ஓரிரு கதைகளை படித்து விட்டு அவர்களை வகைப்படுத்தலானது நகைப்பிற்குரியது.

(23ம் பக்கம் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வினை

புதிய தரிசனம் சஞ்சிகைபற்றிய குறிப்பு வெள்ளிநாதத்தில் வெளிவந்திருந்தது. அதில் வந்த சில கருத்துகளுடன் முரண்படும் இராகவன் எழுதிய குறிப்பும், முரண்பாட்டுக்குரிய குறித்த பந்தியும் தரப்படுகின்றது.

"எதிர்ப்பிலக்கியம் ஒரு கலாசார ஆயுதம்" என்னும் நூலுக்கு விமர்சனம் எழுத முனைந்துள்ள இராகவன் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பாளனின் நேரடி அனுபவங்கள் எதிர்பாளனின் நேரில் அனுபவங்கள், எதிர்பிலக்கிய போலிகள் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்த முனையும் அவர் எதிர்ப்பிலக்கியபோலிகள் என்று சிலரைக் குறிப்பிடுகின்றார்.

"தன்னை ஓர் எதிர்ப்பாளனாக காட்டிக் கொள்ளவருகின்றவர். நேரடியான அனுபவமோ, மறைமுகமான அனுபவமோ எதுவுமின்றி எடுத்த எடுப்பிலேயே தன் முனைப்புடன் எதிர்ப்பிலக்கியத்தை ஒரு படைக்கலமாகக் கையாளுவதன் மூலம் நேரும் விபத்தினால் எதிர்ப்பிலக்கிய போலிகள் தோன்றுகின்றன. சிலவேளையில் எதிர்ப்பாளனுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அனுபவங்கள் இருக்கும். அதைத் தன் முனைப்புடன் பதிவு செய்ய முயலுகையில் அது எதிர்ப்பிலக்கிய போலியை உருவாக்கிவிடும்," எனக்கூறும் இராகவன், ச.முருகானந்தன், வளவை வளவன், யோ.கர்ணன் போன்றோரின் சில சிறுகதைகள் எதிர்ப்பிலக்கிய போலிகளுக்கான நல்ல எடுத்துக்காட்டுகளாகும் எனவும் கூறுகின்றார்.

இராகவன் கூறுவது உண்மையாகவும் இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால் இவ்வாறு கூறப்படுபவர்களில் ஒருவரான கர்ணன் ஒரு போராளியாக நீண்ட காலம் பணியாற்றியவர். அவரது படைப்பாக்க முயற்சியில் உள்ள குறைபாட்டால் இவ்வாறான நிலைமை வரலாம். ஆனால் எடுத்த எடுப்பிலேயே இவ்வகையான குற்றச்சாட்டுக்களை ராகவன் போன்றவர்கள் சுமத்தலாமா?

இவ்வாறான முடிந்த முடிவுகளை மொட்டையாகத் தெரிவிக்கக்கூடாது. போறவண்டியில் கோடாலிகளைப் போடுவது போல போடாமல் விளக்கமாக உதாரணங்களுடன் தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வது தான் யோ. கர்ணன் போன்ற படைப்பாளிகளுக்கு உதவியாக அமையும். அவர்களது மாற்றுக் கருத்துக்களை முன்வைக்க அவர்களுக்கு உதவி புரியும்.காலங்காலமாக எமது இலக்கிய உலகில் இவ்வாறான கருத்துக் கூறல்கள் கூறுவோர் உள்ளனர். எதையும் பூரணமாக விளக்காமல் கூறும் இவர்கள் தங்கள் நடைமுறையினை மாற்றமுனைய வேண்டும்.

*இணுவையூர்*
*சிதம்பரதிருச்செந்திநாதன்*
*(வெள்ளிநாதம் 6-12. 08. 2004)*

06-12-08-2004 வெள்ளிநாதம் இதழில் இலக்கியபகிர்வு பகுதியில் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் வெளிப்படுத்தியிருக்கும் சில விடயங்கள் தொடர்பில் எனது கருத்துக்களை பதிவு செய்யவிரும்புகின்றேன்.

1) "எதிர்ப்பிலக்கியம் ஒரு கலாசார ஆயுதம்" எனும் சிறு நூலுக்கு நான் விமர்சனம் எழுதமுனையவில்லை. அறிமுகக்குறிப்பினை மாத்திரமே எழுதியிருந்தேன்.

2) நான் கூறுவது உண்மையா இல்லையா என முடிவுக்கு வரமுடியாத நிலையில் 'அதுவேறுவிடயம்' என நழுவுகிறார். ஒரு நேர்மையான இலக்கியவாதியால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறுகின்ற ஒரு கூற்று உண்மையா இல்லையா என்ற உறுதியான முடிவுக்கு வரஇயலும். 'அதுவேறுவிடயம்.'

3. நான் எழுதியிருந்தது 'ச.முருகானந்தன், வளவைவளவன், யோ.கர்ணன் போன்றோரின் சில சிறுகதைகள் எதிர்ப்பிலக்கியப் போலிகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.'

4) "------ ஆனால் இவ்வாறு கூறப்படுபவர்களில் ஒருவரான கோ.கர்ணன் (3வது கருத்தின்படி யோ.கர்ணன்) ஒரு போராளியாக நீண்டகாலம் பணியாற்றியவர். அவரது படைப்பாக்க முயற்சியில் உள்ள குறைபாட்டால் இவ்வாறான நிலைமை வரலாம். ஆனால் எடுத்த எடுப்பிலேயே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை இராகவன் போன்றவர்கள் சுமத்தலாமா?-----" என்ற கேள்வியை சிதம்பரதிருஎழுப்புகிறார். இந்த இடத்தில் நான் இரு கேள்விகளை எழுப்புகிறேன்.

'ஒருவர்போராளி எனின் அவரால் எதிர்ப்பிலக்கியப்போலிகளுக்குள் அடங்கும் சிறுகதைகளை எழுதவே முடியாது' எனும் பொது விதி ஏதேனும் உண்டா? ('அவரது படைப்பாக்கமுயற்சியில் உள்ளகுறைபாட்டால் இவ்வாறான நிலைமை வரலாம்.' என யோ.கர்ணனுக்கு இருக்கின்ற முக்கிய குறைபாட்டை வெளிப்படுத்திய இலக்கிய நேர்மைக்காக சிதம்பரதிருவை மனதாரப்பாராட்டுகின்றேன்.)

மலைமகள், பிரதீபகுமாரன் போன்றோரின் படைப்புகளோடு ஒப்பிடுகின்ற போது கோ.கர்ணன் அல்லது யோ.கர்ணனின் படைப்புகள் எந்தளவுக்கு நுணுக்கமாகவும் கலைத்துவத்துடனும் வெளிப்பாடடைந்துள்ளன.?

5) நான் எழுதியது ஓர் அறிமுகக்குறிப்பு. இதனால் எடுத்துக்காட்டுக்களை குறிப்பிடுவதே பொருத்தமானது. இந்நிலையில் கோ.கர்ணன் அல்லது யோ.கர்ணன் போன்றோரின் படைப்புகள் ஏன் எதிர்பிலக்கியப்போலிகள் எனும் வகுதிக்குள் உள்ளடங்கும். தகுதியைப் பெற்றிருக்கின்றன. என உதாரணங்களுடன் விளக்குவது பொருத்தமாக இருக்காது. மொட்டையாகத் தெரிவிப்பதே சரியாக இருக்கும்.

7) "------ காலங்காலமாக எங்கள் இலக்கிய உலகில் இவ்வாறான கருத்துக்கூறல்கள் கூறுவோர் உள்ளனர். எதையும் பூரணமாக விளங்காமல் கூறும் இவர்கள் தங்கள் நடைமுறையினை மாற்றமுனைய வேண்டும்." என அறிவுறுத்தும் ஆதங்கப்படும் சிதம்பரதிரு இந்நிலைமையை மாற்ற ' செங்கையாழியான் ஜனரஞ்சப்போலி எழுத்தாளர் அல்ல', யோ.கர்ணன் போன்றோரது படைப்புகள் எதிர்ப்பிலக்கியப் போலிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமையாது' என்பவற்றை நிறுவும் பொருட்டு ஏன் ஒரு விரிவான ஆய்வினை முன்னெடுக்கக் கூடாது? இவ்வாறு ஓர்ஆய்வினை சிதம்பரதிரு முன்னெடுத்தால் கீழ்வரும் அனுகூலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

1) போறவண்டிலில் கோடாலிகளைப் போடுகிறவர்கள் வெகுவாக அருகிவிடுவர்.

2) இலக்கிய உலகம் ' இலக்கியா!' 'இலக்கியா!' எனச்செல்லப்பெயரிட்டு சிதம்பரதிருவை காலங்காலமாகத் தலையில் வைத்துக் கொண்டாடும்.

8)." --------- எதையும் பூரணமாக விளக்காமல் கூறும் இவர்கள் தங்கள் நடைமுறையினை மாற்ற முனைய வேண்டும்.---------" என இப்போது அறிவுறுத்தும் சிதம்பரதிரு எண்பதுகளில் 'இலக்கியா' வாகி உமாவரதராசனின் சிறுகதைகள் வெறும் பாலுணர்ச்சி வெளிப்பாடுகள் என்ற கருத்தினை முன்வைத்தபோது அதைப் பூரணமாக விளக்கியிருந்தாரா? தனக்குத் தனக்கெண்டால் சுளகு படக்கு படக்கெண்டடிக்குமாம்.

# காலம் ஆகி வந்த கதை

## -ஓர் அறிமுகக் குறிப்பு-

சு.குணேஸ்வரன்



தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து சென்ற ஒவ்வொரு மனிதனுக்கும் 'நினைவு' என்பது உண்மையில் பாதுகாக்கப்பட வேண்டியதே. அந்நிய தேசத்தில் தமது அடையாளத்தை இழந்து விடுவோமோ என்ற அச்சமே இந்த தாயக நினைவுகளை மீட்டுத் தருகின்றது. இவ்வகையில் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து ஐரோப்பிய வட அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளுக்குச் சென்ற ஈழத்தமிழர்களின் அதிகமான படைப்புகளில் தாயக நினைவு மேலோங்கி இருப்பதற்கும் இதுவே காரணமாகும்.

அந்த நினைவுகளின் ஊடே உரசிச் செல்கின்ற கதைகள் தான் 'காலம் ஆகி வந்த கதை'. இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் அ.இரவியின் 20 கதைகளை உள்ளடக்கி 264 பக்கங்களில் "அந்திவானம்" பதிப்பகத்தினால் இத்தொகுதி வெளியிடப் பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களின் இனப் போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து அதன் படிப்படியான வரலாற்று ஓட்டத்தில் இடம் பெற்ற மாற்றங்களை எமது மக்களின் வாழ்வுடன் இணைந்த வகையில் எடுத்துக் காட்டுகின்றார்.

இந்தக் கதைகளுக்கு எல்லாம் ஆதாரமாக இருப்பது ஆசிரியரின் பிள்ளைப் பருவ (child hood) நினைவுகளே. யாழ்ப்பாணத்தில் அளவெட்டி என்ற கிராமத்தையும் அதனை





அண்டிய அயற்கிராமங்களையும் பகைப்புலமாகக் கொண்டு அந்தப் பருவத்தின் உளநிலையில் நின்றே கதை கூறுகின்றார். தொகுப்பில் உள்ள 20 கதைகளிலுமே எமது மக்களின் மண்ணுடன் பிணைந்த வாழ்வு உள்ளது. அதில் அவர்களின் இயலுமையும் இயலாமையும் உள்ளது. எமது மக்களின் அடையாளமாகக் கருதப்படும் பண்பாட்டு அம்சங்களை ஆங்காங்கே கதைகளில் தெளித்திருக்கின்றார். கோயிற்பண்பாடும், சமூகத் தொடர்புகளும், மரபுகளும், நம்பிக்கைகளும், கலைகளும், கதைகளில் தலைகாட்டுகின்றன.

இரவியின் இந்தக் கதைகளின் பலமாகக் கருதக் கூடியது பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டது போல் எடுத்துரைப்பு முறையும், மொழிக் கையாளுகையும் ஆகும்.

எடுத்துரைப்பு முறை இயல்பாக ஒரே நேர்கோட்டுப் பாணியில் கதைக்கு குறைவு ஏற்பட்டுவிடாத வகையில் செல்கின்றது. இக்கதைகளுக்கு இது சாத்தியமாக அமைந்துள்ளது. ஆனால் தொகுப்பில் இல்லாத வேறு சில கதைகளை அவதானித்த போது (காலமுதிர்-கிழக்கும் மேற்கும், குயிற் கூட்டின் மேலால் பறந்த ஒன்று-யுகம் மாறும், ஜேர்மனியில் ஒரு நகரம் பிறகு பிறேமன் நகரத்துக் காகம்-இன்னுமொரு காலடி, எனது கிராமத்தை பேய்கள் சப்புகின்றன. கண்ணில் தெரியும் வானம்......என்பன சில உதாரணங்கள்) எடுத்துரைப்பில் வித்தியாசம் தெரிகின்றது. காலம், இடம், நோக்கம் என்பவற்றை பொறுத்து நடையில் மாற்றம் ஏற்படுவது இயல்பானதே. அந்த இயல்பான தன்மையே எடுத்துரைப்பிற்கு காரணமாக இருக்கலாம். அத்தோடு அவை புலம்பெயர் சூழலை மையப்படுத்திய கதைகளாகவும் உள்ளன. ஆக இரவியிடம் இரண்டு வகையான எடுத்துரைப்பு முறைகளை அவதானிக்க முடிகின்றது.

சிற்சில கதைகளில் ஈழப்போராட்ட காலகட்டத்தில் இடம் பெற்ற முக்கிய சம்பவங்கள் வலிந்து புகுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. இவை கதைகளின் இயல்புத் தன்மையைப் பாதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் முன்னர் குறிப்பிட்ட ஒரு சம்பவம் அல்லது சித்திரிப்பு மீண்டும் வேறு கதைகளில் அதன் தொடராகத் தொடர்கிறது. இந்தத் தொடர்பு வாசகரை வேறு ஒரு தளத்திற்கு இட்டு செல்கின்றது. ஒரு நாவலில் வரும் சம்பவத் தொடர்பு போல வீட்டுச் சூழல், குடும்ப உறவுகள், கோயிற் சம்பவங்கள், பாடசாலை நினைவுகள் மீண்டும் வருகின்றன.

என்றாலும் ஈழத்து எழுத்துக்களில் ஒரு தொகுதி முழுவதும் பிள்ளைப் பருவ நினைவுகளுடன் கதை கூறியவர்கள் குறைவு என்றே கூறல் வேண்டும். பல படைப்பாளிகள் சிற்சில கதைகளை எழுதியிருந்தாலும் இரவியின் படைப்பு மனோ நிலையில் நின்று எழுதியவர்கள் குறைவே. எடுத்துக்காட்டாக. அ.முத்துலிங்கத்தின் ஒரு சிறுவனின் கதை, தில்லையம்பல பிள்ளையார் கோயில் ஆகிய கதைகளும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தில்லையாற்றங்கரை நாவலில் வரும் சில பகுதிகளிலும், பாத்திரம் சித்திரிப்பு சம்பவங்கள் என்பவற்றிலும் இவர்களுக்கும் இரவிக்கும் இடையில் அதிகளவு ஒற்றுமையை அவதானிக்க முடிகின்றது.

எனவே எமது மண்ணின் கதை கூறும் இரவியின் முதலாவது படைப்பாக இத் தொகுப்பு திகழ்வதால், இவரிடம் இன்னும் நிறையவே எதிர்பார்க்கத் தோன்றுகின்றது.

---

## என்வாசல் வருமென்று

அதி காலையில் எழுந்து
அவள் நினைவுடனே
அண்ணாந்து பார்த்தேன்
அந்த வான் நிலவை!
எனைவிட்டு
என் இதயம் விட்டு
என் ஊரை விட்டு
ஓடுகிறாள் என் இதயம் ஓடுகிறாள்
ஓடட்டும் என் இதயம்
மறுநாளும் புலரட்டும்
இன்னொரு நிலவு என்வாசல் வருமென்று...

S.S. இளையநிலா
மிருசுவில்



# கவிதைப்போட்டி – 5

**இந்த இதழின் அட்டைப் படமாகிய செம்மணிக்கு இசைவந்த வகையில் உங்கள் சிந்தனைக்கு உருக்கொடுத்து கவிதைசக்தியை மேம்படுத்தி கவிதைகளை அனுப்பி வையுங்கள்.**

புதிய தரிசனத்தின் அடுத்த இதழ்
புத்தமைப்புடன் விரைவில் வெளி
வருகிறது. விளம்பரதாரர்கள்
எம்முடன் கோர்த்தும், விற்பனையில்
வாசகர்கள் பங்களித்தும் கைகொடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான ஆடைவகைகளையும்
மலிவான விலையில் பெற்று மகிழ்ந்திட




# நெல்லை சில்க்

பிரதான வீதி, நெல்லியடி.

---

பாடசாலை உபகரணங்கள், உட்பட சகல
புத்தகங்கள், காகிதாதிகள் அனைத்தையும்
பெற்றிட............



# சிதம்பரப்பிள்ளை பொத்தகசோலை

பிரதான வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org